Registered as a News Paper in Sri Lanka

சமூக அரசியல் மாத இதழ்




# கண்ணோட்டம்

KANNODDAM

வெளியீடு - 74 | 10 ஆகஸ்ட் 2016 | விலை ரூபா :- 10.00


# வடக்கு அமைச்சர்களின் ஊழல் மோசடிகள் முதலமைச்சரின் முதற்கட்ட அங்கீகாரம்

**தமிழரசு மலர்ந்து விட்டது என வடக்கு மாகாண சபையை 2013 செப்டம்பரில் முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி திரு. விக்னேஸ்வரன் தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதவியேற்றது. பதவியேற்று மூன்று வருடங்கள் நிறைவடையப் போகின்றன. யுத்தத்தால் பாதிக்கப்பட்டு இறப்புகளையும். இழப்புகளையும். அழிவுகளையும் அனுபவித்த வடக்கு மீண்டும் புத்துயிரோடு எழுச்சி பெறுமென எதிர்பார்க்கப்பட்டது.**



இந்த தமிழரசு மாகாண சபையானது பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாரிய அளவில் புனர்வாழ்வு நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொள்ளும் என யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்பார்த்தார்கள். அழிந்து சிதைந்து போன வடக்கு பிரதேசத்தில் அனைத்து சமூக பொருளாதார வளர்ச்சிக்கான கட்டமைப்புகளும் புனர்நிர்மாணம் செய்யப்படும் என தமிழ்ப் பொதுமக்கள் ஆவல் கொண்டார்கள், மாகாணசபை வந்து விட்டது இனி பட்டதாரிகளுக்கும், உயர்தரம் வரை படித்துவிட்டு வேலையற்று இருக்கும் தமிழ் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் வேலைவாய்ப்புகளுக்குக் கவலையில்லை என எண்ணினார்கள், வடக்கின் விவசாயம், மீன்பிடி மற்றும் தொழிற்துறைகள் அபிவிருத்தி அடைவதற்கு இனித் தடங்கல் இருக்காது என வடக்கு மக்கள் கனவு கண்டார்கள். ஆனால் எல்லாமே பொய்யாய் புனை கதையாய் போனது.

( தொடர்ச்சி 9 ஆம் பக்கம் பார்க்க )



# மஹிந்தவின் பாத யாத்திரை

## சுதந்திரக் கட்சியின் உடைவுக்கு மணியோசை

2015 ஜனவரியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளராக மைத்திரி அவர்கள் மஹிந்தவுக்கு எதிராக நிறுத்தப்பட்ட அன்றே சிறி லங்கா சுதந்திரக் கட்சி உத்தியோக பூர்வமற்ற வகையில் உடைந்து விட்டது. ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுபவரே கட்சியின் தலைவராவார் என மஹிந்த ராஜபக்சவே சுதந்திரக் கட்சியின் அமைப்பு விதிகளை தனக்கு வசதியாக தான் பதவியில் இருந்த காலத்தில் மாற்றியமைத்தார். மைத்திரி அவர்கள் ஜனாதிபதி ஆனபோது மஹிந்த ஆக்கிய கட்சிச்சட்டமே மஹிந்தவை கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து நீக்கி மைத்திரியை தலைவராக்கியது.

2015ம் ஆண்டு ஆகஸ்டில் நடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக சிறி லங்கா சுதந்திரக் கட்சி போட்டியிட்ட போதிலும் மைத்திரி - சந்திரிகா பிரிவினர் வேறாகவும், மஹிந்த அணியினர் வேறாகவுமே பிரச்சாரங்களில் ஈடுபட்டனர். ஒரு குழுவைச் சார்ந்தவரை மற்றக் குழுவிலுள்ளவர்கள் எப்படியாயினும் தோற்கடித்து விட வேண்டுமென்றே முயற்சித்தனர். இதனால் உட்கட்சி ஒற்றுமை என்பது ஒட்ட முடியா அளவுக்கு விரிசலடைந்தது.

( தொடர்ச்சி 2 ம் பக்கம் பார்க்க )

## தடைகளைத் தாண்டி நிறைவேறிய சட்டமூலம்

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் ஸ்தாபித்தலும் நிர்வகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும் சட்டமூலம் 11.08.2016 அன்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தலைமையில் செயற்படும் கூட்டு எதிரணி கட்சிகளின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில், வாக்களிப்பின்றி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

1. காணாமற்போனவர்களை தேடிப்பார்த்தல்
2. காணாமல் போதல் பற்றிய பின்புலம் மற்றும் நடந்தவை பற்றி அறிந்து கொள்ளல்
3. காணாமல் போதல்களை குறைக்க யோசனைகளை முன்வைத்தல்
4. காணாமற்போனவர்களின் குடும்பங்களுக்கு வழங்குவதற்கான நிவாரணங்கள் பற்றி யோசனைகளை முன்வைத்தல்

*ஆகிய 4 விடயங்களை காணாமற் போனார்* அலுவலகம் கையாளும் என இச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

# விஷ ஊசி விவகாரம் உண்மையா? போலி அரசியலா?

இராணுவத்தால் விடுதலை செய்யப்பட்ட முன்னாள் புலிப் போராளிகளின் உடலில் விஷம் ஏற்றப்பட்டிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் வாதிகளும் நாளாந்த தமிழ்ப் பத்திரிகைகளும் இப்பொழுது ஒரு நாள் தவறாமல் குற்றம் சாட்டுகின்றன. உடனடியாக அல்லாமல் சிறிது காலத்தின் பின்னரே மரணத்தை விளைவிக்கக் கூடிய விஷத்தை இராணுவத்தினர் ஊசி மூலமோ அல்லது சிறிது சிறிதாக உணவினூடாகவோ இந்த போராளிகளின் உடலில் ஏற்றியிருக்கிறார்கள் என்றே பகிரங்கமாக குற்றச்சாட்டுகள் எழுப்பப்படுகின்றன.

இந்தக் குற்றச்சாட்டு அரசியல் சமூக ரீதியில் ஒரு பாரதூரமான விடயமாகும். விடுதலை செய்யப்பட்ட அந்த போராளிகளில் 10000க்கு மேற்பட்டவர்கள் வடக்கு கிழக்கிலேதான் இருக்கிறார்கள். அவர்கள் மத்தியிலும் அவர்களது குடும்பத்தவர்கள் மத்தியிலும் ஒரு பெரும் பயக் கெடுதியை ஏற்படுத்தக் கூடிய ஒரு விடயம். தமிழ் தேசவாத அரசியல் அறிக்கைகளாகவும் பத்திரிகைகளில் சந்தேகம் எழுப்பும் செய்திகளாகவும், விரிவான நாளாந்த கட்டுரைகளாகவும் வெளியிடப்படுகின்றன.

இது வெறுமனே ஓர் அரசியல் லாப விளையாட்டாகவோ அல்லது பத்திரிகைகளின் வியாபாரக் கவர்ச்சியாகவோ இருந்தால் இது ஓர் ஆபத்தான விடயமாகும். இதுவரை எந்தவொரு வைத்திய நிபுணரும் அபிப்பிராயம் கூறவில்லை. விடுதலை செய்யப்பட்ட அந்தப் போராளிகளில் எவரது உடலிலும் விஷம் ஏற்றப்பட்டிருப்பது தொடர்பாக வைத்திய பரிசோதனை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

( தொடர்ச்சி 7 ஆம் பக்கம் )

## தடைகளைத் தாண்ட முடியாத நல்லிணக்கம்

கடந்த 30 வருடங்களாக யுத்தத்தில் ஈடுபட்ட தமிழ் - சிங்கள இனங்களுக்கிடையில் நல்லிணக்கம், புரிந்துணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். நல்லிணக்கம் உருவாக வேண்டுமானால் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த முன்னாள் ஜனாதிபதியும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான செயலணியின் தலைவியுமான சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்க தெரிவித்தார்.

அத்தகைய அபிவிருத்திக்குத் தடையாக மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைகளுக்கும் இடையில் உள்ள கருத்து வேறுபாடுகளை போக்கி இருதரப்பும் இணைந்தே அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க எண்ணியுள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நீதியான போர்க்குற்ற விசாரணையை உறுதி செய்யாது வெறும் பொருளாதார நன்மைகளை தமிழ் மக்களுக்கு அளிப்பது அவர்களை விலைக்கு வாங்குவதாக அமையும் அது உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாக அமையாது என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கைகோர்க்கும் இனவாதமும் தேசியவாதமும்



பக்கம்-03



பக்கம்-05

பக்கம்-06

தோழர்களை நினைவு கூருவோம்



பக்கம்-07

கைதவறும் சம்பூர் மின்திட்டம்



பக்கம்-08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணோட்டம்
KANNODDAM

294, கண்டிவீதி, புங்கன்குளம் சந்தி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 2222022



## சமூகங்களுக்கிடையில் சமத்துவம் சமூக நல்லிணக்கத்திற்கு அடிப்படை

இலங்கையின் வெவ்வேறு அரசியல் மட்டங்களுக்கு அதிகாரங்களை கொண்டு செல்வதில் மத்திய அரசிடம் ஒரு தயக்க நிலை காணப்படுகிறது. இந்த நாட்டில் அரசியல் நிர்வாக இயந்திரப் பொறிகள் ஒன்றுக்கொன்று இசைவாகவும் சுமுகமாகவும் இயங்கவேண்டும். அப்போதுதான் நாட்டின் சகல தரப்பு மக்களும் பயனடைவார்கள் - தாம் சமத்துவமாக வாழ்வதாக உணர்வார்கள். அப்போது தான் மக்களின் தன்னம்பிக்கையும், ஆக்க சக்தியும் வீரியத்துடன் வெளிப் படும். சமூக பொருளாதார அபிவிருத்தியின் சிகரங்களை இந்த நாடு தொட வேண்டுமானால் இவை அடிப்படையான நிபந்தனையாகும்.

தெற்கில் வெவ்வேறு காலங்களில் நடந்த இரண்டு வன் முறைக் கிளர்ச்சிகளும் சரி, வடக்கு கிழக்கில் 30 வருட காலமாக நடந்த யுத்தமும் சரி இந்த நாட்டின் சமத்துவ மின்மையின் வெளிப்பாடுகளே.

துரதிஸ்ரவசமாக இன்றுவரை இது மக்கள் மத்தில் செல் வாக்குப் பெற்றுள்ள அரசியற் தலைவர்களாலோ, சமூகப் பிரமுகர்களாலோ உணரப்பட்டதாக தெரியவல்லை. அதி காரங்கள் மாகாண சபைகள் மற்றும் கிராமிய ஆட்சி மட்டங் களுக்கு மனப்பூர்வமாக பகிரப்பட வேண்டும். இத்தனை பேரழிவுகளின் பின்பும் இலங்கையின் அரசியல், அதிகார வர்க்கம் அது பற்றிய எந்த பிரக்ஞையும் இன்றி இருக்கின்றது. மாகாணசபை முறை அறிமுகப்படுத்தப்பட்டு கால் நூற்றாண் டுகள் கடந்து விட்டன. எனினும் அதிகாரங்களை பகிர்வதில் இன்னமும் இழுபறிகளும் கெடுபிடிகளும் தொடருகின்றன.

சமூகங்களின் உள்ளே அதிருப்திகள் தொடரும் போது அதன் வெளிப்பாடாக மீண்டும் மீண்டும் புதிய புதிய வடிவங்களில் கிளர்ச்சிகள் வெடிப்பதற்கே வழி வகுக்கும். அரசியல் அதிகார அவா பிடித்த சக்திகள் இன்று வரை இனவாத குறுக்கு வழிகளில் அதிகாரத்தைக் கைப்பற்றி வந்திருக்கின்றன. இது நீதியான - நியாயமான அரசியலினை எதிர்பார்ப்பவர் களுக்கு கவலை அளிக்கும் விடயமாகும்.

திரும்பத் திரும்ப விபரீதமான இனவாத அரசியல் விளை யாட்டு தொடருமானால் திட்டவட்டமான கூட்டாட்சி முறை யிலான தீர்வே தமக்கு பாதுகாப்பானது என மக்கள் எண்ணுவதில் எந்தத் தவறும் காணமுடியாது.

இத்தனை பேரழிவுகள் நிகழ்ந்த பின்னராயினும், அதற்குக் காரணமான இனப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வொன்று எட்டப்பட வேண்டும் என்பது பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படாலும் அதுவும் பலன்தரா வகையில் கெடுக்கும் வண்ணம் இழுபறிகளும் பிய்த்தல் பிடுங்கல்களும் தலை தூக்கி நிற்கின்றன. எண்ணிக்கையில் பெரும்பான்மையான சமூகத்தைத் தவிர மற்றைய சமூகங்கள் கீழ் நிலையில் வைக்கப்பட வேண்டும் என்ற ஆதிக்க மனநிலை தொடருமானால் அது இந்த நாட்டில் இனங்களுக்கிடையிலான சகோதரத்துவத்தையோ சமாதான சகவாழ்வையோ ஏற்படுத்தாது. மாறாக, முரண்பாடு களையும் மோதல்களையும் தொடரப்பண்ணுவதாகவே இருக்கும்.

சமத்துவமான சமூக உறவு நிலையே இன்று உலகளாவிய வகையில் வலுவடைந்திருக்கும் விருப்பமாகும். "இலங்கை யில் சிங்கள பௌத்தர்களே பெரும்பான்மையினர். இலங்கை சிங்கள பௌத்தர்களுக்கே உரியது. இலங்கையில் உள்ள ஏனைய இனங்கள் சிங்கள் பௌத்தர்களை அண்டித்தான் -இரண்டாம் தர நிலையில் இருந்துதான் பிழைக்க வேண்டும்" என்பது சிங்கள பௌத்த மேலாதிக்க வெறி கொண்ட கருத்தாகும். இந்த ஆதிக்க மனோநிலை இலங் கையின் எந்த சமூகத்தையும் முன்னேற்றத்தை நோக்கி அழைத்துச் செல்லாது.

இலங்கையின் அனைத்து சமூகங்களும் முன்னேற வேண்டுமானால் சமூகங்களிக்கிடையில் நல்லுறவு வளர வேண்டும். அதற்கு சமூகங்களுக்கிடையில் சமத்துவம் நிலவ வேண்டும். அதிகாரத்தில் இருக்கும் அரசியல் சக்திகள் வெவ்வேறு இன சமூகங்களின் அபிலாசைகளை கருத்தில் எடுத்து சமூகங்களை ஒன்று படுத்த முயல வேண்டும். அத் தோடு சட்டத்தின் ஆட்சி என்பது எங்கும் சமமாக நிர்வகிக் கப்பட வேண்டும் என்பதில் ஆட்சியாளர்கள் உறுதியாக இருந்தால்தான், யுத்தத்தாலும் வன்முறைகளாலும் சுடு காடாக இருந்த இந்த நாட்டை, சாதாரண குடிமக்களும் விரும்பி வாழுவதற்கு தகுதியான ஒரு நாடாக ஆக்க முடியும்.



தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் மத்திய குழு கூட்டம் 07.08.2016 அன்று கட்சியின் தலைவர் சுகு சிறிதரன் தலைமையில் திருகோணமலையில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது

## மஹிந்தவின் பாத யாத்திரை...

( 1 ம் பக்கத் தொடர்ச்சி )

பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியின் மைத்திரி – சந்திரிகா பிரிவினரும் இணைந்து கூட்டாட்சியை அமைத்தமையி னால், மஹிந்த அணியைச் சேர்ந்தவர்கள் என்று கருதப் பட்ட வேறு சிலரும் ஆட்சியில் இணைந்து மைத்திரி – சந்திரிகா பிரிவினர் ஆயினர். சுதந்திரக் கட்சியின் மஹிந்த அணியினர் மைத்திரி – ரணில் கூட்டாட்சியில் இணையா மல் எதிர்க்கட்சி வரிசையில் உட்காரத் தீர்மானித்தார்கள். அதன் விளைவாக, மஹிந்த தலைமையில் 41 சுதந்திரக் கட்சிக்காரர்கள் பாராளுமன்றத்தில் எதிர் கட்சிக்காரர்களாக அமர்ந்தனர். எனினும் அவர்கள் ஒரு தனியான அங்கீ கரிக்கப்பட்ட கட்சி அடையாளம் கொண்டவர்களாக இல்லாமல் தொடர்ந்தும் தாங்கள் சிறி லங்கா சுதந்திரக் கட்சிக்காரர்களே என்றதனால் மஹிந்த அணியனர் எதிர கட்சித் தலைவர் பதவியினைப் பெற முடியவில்லை.

மைத்திரி – சந்திாகா கூட்டைப் பொறுத்தவரையில் மஹிந்தவை அரசியலிலிருந்து படிப்படியாக ஓரம் கட்டுவதே திட்டம். மஹிந்தவைப் பொறுத்த வரையில் சிறி லங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து இப்போதே தான் வெளியேறி தனிக் கட்சி அமைத்தால் சுதந்திரக் கட்சியின் வரலாற்றுரீதியான அரசியற் தளங்கள் அனைத்தையும் தான் இழக்க நேரிடும் என்ற அச்சம். அதேவேளை சுதந் திரக் கட்சியின் உத்தியோகபூர்வமான பிடிமானங்கள் எதுவும் மஹிந்தவிடம் இல்லை.

சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்து தனிக்கட்சி அமைப்பது தனது நிலையைப் பொறுத்தவரையில் தவிர்க்க முடியா ததே என்பது மஹிந்தவுக்கு தெரிந்திருந்தாலும் அதற்கு முதலில் சுதந்திரக் கட்சியின் பலமான அடித்தளங்களில் பெரும்பாலானவற்றை தான் கைப்பற்றி விட வேண்டும் என்பதே மஹிந்தவின் திட்டம்.

காலம் தாழ்த்தினால் உள்ளதும் இல்லாமற் போய்விடும் என்பது கோத்தபாய மற்றும் பஸில் ஆகியோரின் அச்சம். எனவே அவர்கள் உடனடியாகவே ஒரு புதிய கட்சியை ஆரம்பிக்க வேண்டுமென்பதில் துடிப்பாக இருக்கிறார்கள். உள்ளூராட்சித் தேர்தல்களையே மஹிந்த குறி வைத்து காத்திருக்கிறார். உள்ளூராட்சி தேர்தலின் போது அடிமட்ட மக்கள் மத்தியில் தனக்கு உள்ள செல்வாக்கை நிலை நிறுத்தி விட்டால் சுதந்திரக் கட்சியின் பெரும்பான்மையான வர்கள் தன் பக்கம் சாய்ந்து விடுவார்கள்; அதன் மூலம் சுதந்திரக் கட்சியை உத்தியோக பூர்வமாக கைப்பற்றி விடலாம் என்பதே மஹிந்தவின் கணிப்பு.

இப்போதிருக்கும் ஆட்சிப் பலத்தைக் கொண்டு உள்ளு ராட்சி மட்டங்களில் தமது செல்வாக்கை நிலைநிறுத்திய பின் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த வேண்டும் என்பதே மைத்திரி – சந்திரிகா கூட்டின் திட்டம். அதனாலேயே உள்ளூராட்சித் தேர்தற் திகதி அடுத்தடுத்து தள்ளிப் போடப்படுகின்றது.

ஒரு தனித்துவமான கட்சியும் இல்லாமல், ஆட்சிப் பலமும் இல்லாமல் அடுத்தடுத்து ஊழல் மோசடி விசாரணைகளுக் கும் உட்பட்டுக் கொண்டே இருப்பது மஹிந்தவிடம் இருக் கும் செல்வாக்கை படிப்படியாக இழக்கவே நேரிடும். இதை அறியாவர்களல்ல மஹிந்த ராஜபக்ச சகோதரர்கள். இதனாலேயே, தமது மக்கள் செல்வாக்கை வெளிப்படுத்தி ஓர் அரசியற் பிரமையை ஏற்படுத்தவே மஹிந்த தமது கண்டி – கொழும்பு யாத்திரையை திட்டமிட்டார். ஆனால், இந்த யாத்திரையின் விளைவாக சுதந்திரக் கட்சியின் உத்தியோகபூர்வ தலைமையானது தனது அணியிலுள்ள வர்களை ஒவ்வொன்றாகக் கழட்டி சுதந்திரக் கட்சிக்குள் தனக்கிருக்கும் செல்வாக்கை இல்லாது பண்ணும் என் பதை மஹிந்த புரிந்தே இருப்பார். சுதந்திரக் கட்சிக்குள் தான் அமைதியான ஒருவராக தொடர்ந்து இருப்பது தமது அரசியல் இருப்பை காலப் போக்கில் இல்லாது ஆக்கி விடும் என்பதிலும் மஹிந்த தெளிவானவரே.

ஏதிர்பார்த்தபடியே மஹிந்தவின் கண்டி – கொழும்பு யாத்திரை சுதந்திரக் கட்சியின் உத்தியோக பூர்வ தலை மையை ஒரு தீர்மானகரமான முடிவெடுக்கும் கட்டத்துக்கு தள்ளியிருக்கிறது. மஹிந்தவின் தொடர்ச்சியான இவ் வாறான செயற்பாடுகள் மைத்திரி-சந்திரிகா கூட்டுத் தலை மையிலான சுதந்திரக் கட்சியை நாளடைவில் பலயீனப் படுத்திவிடும் என்பதனால் மஹிந்த அணியினரை உடைப் பது – விலக்குவது – ஓரம் கட்டுவது என்பனவற்றை தீவிரமாக மேற்கொள்ள தூண்டியுள்ளது.

சிறி லங்கா சுதந்திரக் கட்சி உடைவது ஐக்கிய தேசியக் கட்சிக்கே நன்மை பயக்கும் என்பது அதிலுள்ள இரு பகுதியினருக்கும் நன்கு தெரியும். இருப்பினும் இதற்கு மேல் இரு பகுதியினராலும் ஒன்று சேர முடியாது என்பது தெளிவு.

எப்போது மஹிந்த உத்தியோக பூர்வமாக தமது புதுக் கட்சியின் தொடக்கத்தை அறிவிப்பார் என்பது இப்போ தைக்கு தெரியாவிட்டாலும், அதற்கான அடிக்கட்டுமான வேலைத் திட்டங்களை ராஜபக்ச சகோதரர்கள் ஏற்கனவே தொடங்கி விட்டார்கள் என்பதுவும் கண்கூடு. மஹிந்தவின் புதிய கட்சி மிக விரைவில் அறிவிக்கப்பட உள்ளது என்பதையே மஹிந்தவின் கண்டி – கொழும்பு பாத யாத்திரை கட்டியம் கூறி நிற்கிறது.

### தோழர்களே! நண்பர்களே! வாசகர்களே!

அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும் , ஆக்கங்களையும் வரவேற்கிறோம்.
அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும் :-

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

294, கண்டி வீதி
யாழ்ப்பாணம்.
021 2222022

E P I C
P.O. Box 431
Sutton SM1 9LE
UK
email: eprlfp@yahoo.co.uk

165, கடல்முக வீதி,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைகோர்த்துச் செயற்படும் இனவாதமும் தேசியவாதமும்

**அன்பார்ந்த வாசகர்களே,**

கடந்த இதழில் பிரித்தானியாவில் இடம்பெற்ற ஐரோப்பிய ஒன்றியத்தில் தொடர்ந்து இருப்பதா? இல்லையா? என்பது குறித்த வாக்கெடுப்புப் பற்றிய விபரங்களைத் தந்திருந்தேன். இவ் வாக்கெடுப்பு அதிகளவு ஐரோப்பியர்கள் கட்டுப்பாடு இல்லாமல் பிரித்தானியாவிற்குள் வருவதற்கு எதிராக என வெளியில் காட்டப்பட்ட போதிலும் பிரித்தானிய தேசியவாதம் இறைமையைப் பாதுகாத்தல் என்ற போர்வையில் நடத்திய தேர்தலாகவே கணிக்கப்படுகிறது. இதே நாடகம் தற்போது அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சியினரால் வெளிநாட்டவருக்கு எதிராக குறிப்பாக முஸ்லீம்களுக்கு எதிராக வெளிப்படையாக நடத்தப்படும் பிரச்சாரங்கள் காட்டுகின்றன. இதே பிரச்சாரங்களே தேசிய இறைமையைப் பாதுகாத்தல் என்ற போர்வையில் இலங்கையிலும் நடத்தப்படுகின்றன.

## ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகியது பிரித்தானியா

பிரித்தானிய வாக்கெடுப்பின் முடிவில் 52 சதவீத மக்கள் வெளியேறுவதற்கு ஆதரவாக வாக்களித்தனர். பிரித்தானிய உற்பத்தியின் சுமார் 60 சதவீதம் ஐரோப்பிய சந்தைகளை நிறைத்திருந்த நிலையில் இம் முடிவுகள் மக்களால் வெளியிடப்பட்டுள்ளன. ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகினால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கும். உற்பத்தி தேக்கம் ஏற்படும். நிதி நெருக்கடி ஏற்படும் என பல எதிர்வுகள் கூறப்பட்டன. அவற்றில் பல நிஜமாகி வருவதை மக்கள் அனுபவிக்கத் தொடங்கியுள்ளனர். இவ் வாக்கெடுப்பை தலைமை தாங்கி நடத்திய பிரதமர் டேவிட் கமரோன் இணைந்திருப்பதற்கு ஆதரவாக பிரச்சாரம் நடத்திய போதிலும் மக்கள் அவரது கோரிக்கைக்கு எதிராக வாக்களித்தனர். இதனால் அவர் பிரதமராக இன்னும் 3 ஆண்டுகள் பதவியில் இருக்க வாய்ப்பிருந்தும் தனது பதவியைத் துறக்க நேரிட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் மக்கள் அவ் ஒன்றியத்தின் எல்லைக்குள் தடையின்றி சென்றுவர முடியும் என்ற வாய்ப்பு வழங்கப்பட்டமையால் பலர் பிரித்தானியாவிற்குள் நுழைந்தனர். இதில் குறிப்பாக போலந்து நாட்டினரே மிக அதிகளவில் வந்தனர். வாக்கெடுப்பு முடிவுகள் ஒன்றியத்திலிருந்து வெளியேறுவதற்கு ஆதரவாக வாக்களித்த மறுநாளே ஐரோப்பிய மக்களுக்கு எதிரான பல தாக்குதல்களாக மாற ஆரம்பித்தன. பாடசாலைகளில் ஐரோப்பிய மாணவர்கள் பயமுறுத்தல்களை எதிர்கொண்டனர். பிரித்தானிய நாணயத்தின் பெறுமதி குறைந்தது. உள்நாட்டில் பணவீக்கம் அதிகரித்தது.

இங்கு எமது கவனத்திற்குரிய அம்சம் என்னவெனில் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவதற்கான பிரச்சாரத்தின் பின்னணி பிரித்தானிய தேசியவாதமே என்பது மிகவும் கவனமாக இறைமையைப் பாதுகாத்தல், ஜனநாயகத்தைப் பலப்படுத்தல் என்ற திரையால் மூடி மறைக்கப்பட்டு நடத்தப்பட்டுள்ளது. இத் தேசியவாதத்தின் அப்பட்டமான உண்மையை ஸ்கொட்லாந்து மக்கள் தெளிவாக அடையாளம் கண்டு கொண்டார்கள். அதன் காரணமாகவே இவ் வாக்கெடுப்பில் 60 சதவீதத்திற்கு அதிகமான தமது மக்கள் இணைந்திருப்பதற்கு ஆதரவாக வாக்களித்ததால் தமது சுயாட்சியை மீண்டும் உறுதிப்படுத்த பிரிந்து செல்லும் உரிமையைக் கேட்டு மீண்டும் வாக்கெடுப்பு நடத்தப் போவதாக பயமுறுத்தியுள்ளனர். பிரித்தானியர்களின் ஆங்கிலேய குறுகிய தேசியவாதம் எவ்வகையிலும் தம்மைக் கட்டுப்படுத்தப்போவதில்லை என பிரித்தானிய அதிகாரப் பரவலாக்க அடிப்படையில் சுயாட்சி அதிகாரத்தை அனுபவிக்கும் ஸ்கொட்லாந்து மக்கள் கோருவது ஜனநாயகத்தின் இன்னொரு பக்கமாகும்.

## சில்கொட் விசாரணை அறிக்கை

முன்னாள் பிரித்தானிய பிரதமர் ரொனி பிளேயர் தலைமையிலான அரசு அன்றைய அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் உடன் இணைந்து ஈராக் நாட்டின் அதிபர் சதாம்ஹுசைன் மனித சமுதாயத்தை மிக அதிகளவில் அழிக்கும் சக்தி வாய்ந்த ஆயுதங்களை மறைத்து வைத்திருப்பதாகக் கூறி படை எடுத்தனர். இறுதியில் அவ் ஆயுதங்கள் கண்டெடுக்கப்படவில்லை. பதிலாக இன்று வரை பல இலட்சம் மக்கள் இறந்தும், அகதிகளாகவும் போய், அங்கு நிலையற்ற ஆட்சியும் தொடர்கிறது. தொழிற் கட்சி தலைமையிலான அன்றைய அரசு மக்களுக்குத் தவறான தகவல்களை வழங்கியது. ஐ.நா சபையின் ஆதரவைப் பெறாமல் போருக்குச் சென்றது. போருக்கு எதிராக மக்கள் தமது எதிர்ப்பினை பெருமளவு வெளிப்படுத்தியும் போரை நிறுத்தாது தொடர்ந்தமை எனப் பல குற்றச்சாட்டுகளை மக்கள் முன்வைத்தனர்.




பிரித்தானியாவில் நடைபெற்ற ஐரோப்பிய இணைப்பு பற்றிய வாக்கெடுப்பு எவ்வாறு இனவாதத்தின் உள்ளடக்கத்தைக் கொண்டிருந்ததுவோ, அதேநிலை தற்போது ஐரோப்பா எங்கணும் வியாபித்து வருகிறது. இனவாதமும், தேசியவாதமும் கைகோர்த்துச் செல்கிறது. ஹிட்லர், முசோலினி, இலங்கையில் கே.எம்.பி. ராஜரத்னா போன்றோர் மீளவும் உயிர் பெறுகின்றனர். எனவே இலங்கையில் கண்டியிலிருந்து கொழும்பு வரை செல்லும் ஊர்வலங்கள் எதுவும் தொடர்பற்ற சம்பவங்களாக இல்லை. இவற்றிற்கு ஓர் உள்ளடக்கம் உண்டு. அவை இறைமை என்ற முகமூடியுடன் நடத்தப்படும் மேலாதிக்க அல்லது குறுகிய தேசியவாதமே. மக்கள் விழிப்புணர்வு பெறாவிடில் அதற்கான விலையைச் செலுத்துபவர்கள் சாமானிய மக்களே.

அதன் விளைவாக அன்றைய டேவிட் கமரோன் அரசு அதன் உண்மைகளை வெளியில் கொண்டு வரும் பொருட்டு சில்கொட் என்பவர் தலைமையில் விசாரணைக் குழு ஒன்றை அமைத்தது. சுமார் 7 ஆண்டுகளுக்கு மேலாக நடத்தப்பட்ட விசாரணையின் அறிக்கை தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

**வாசகர்களே,**

இலங்கையில் போர்க்குற்ற விசாரணை நடத்துவது தொடர்பாக விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. இப் போரில் இறந்த மக்கள் தொகை குறித்து அரசாங்கமோ அல்லது அங்கு செயற்பட்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமோ அல்லது ஏனைய ஐ நா நிறுவனங்களோ ஒரு முகப்பட்ட தொகையை இதுவரை தரவில்லை. இதற்குக் காரணம் என்ன? உண்மையில் இவர்களால் அவற்றைத் தருவதில் கஷ்டங்கள் காணப்பட்டனவா? அல்லது அரசைக் காப்பாற்ற முனையும் இன்னொரு தந்திரமா? இவ்வாறான கேள்வி இன்னமும் நிலவுகிறது.

இதே போன்ற கேள்வி பிரித்தானியாவிலும் எழுந்துள்ள நிலையில் சில்கொட்டின் அறிக்கை வெளியானது. ஈராக் போரில் பிரித்தானியாவின் பங்களிப்பு பற்றிய விசாரணையே அதுவாகும். அவ் அறிக்கை அன்றைய பிரதமர் ரொனி பிளேயர் போர் தொடர்பாக முடிவுகளை மேற்கொண்ட முறை குறித்து தனது சந்தேகங்களை வெளியிட்டுள்ளது. போர் என்பது சகல இதர வழிகளும் அணுகப்பட்டு அவை சாத்தியப்படவில்லை என்ற நிலை ஏற்பட்ட பின்னரே போருக்கான முனைப்பு ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதே சரியான வழிமுறையாகும். ஆனால் அவ்வாறான வழிகள் பின்பற்றப்படவில்லை எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அத்துடன் போருக்கு செல்வதற்காக பயன்படுத்திய உளவுத்துறை தகவல்கள் தவறானவை எனவும், அவற்றின் உண்மைத் தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை எனவும், எனவே உறுதிப்படுத்தாத தகவல்களை அடிப்படையாகக்கொண்டு போருக்குச் சென்றது தவறானது எனவும், அவ்வாறு போருக்குச் சென்ற போதும் ராணுவத்திற்குத் தேவையான போதுமான தயாரிப்பு ஏற்பாடுகள், திட்டமிடுதல்கள் வழங்கப்படவில்லை எனவும் அவ் அறிக்கை கூறுகிறது.

இவ் அறிக்கை சில முக்கியமான அம்சங்கள் குறித்து எதுவுமே தெரிவிக்காதது அறிக்கையின் பக்கச் சார்பற்ற தன்மையை கேள்விக்குட்படுத்தியுள்ளது. உதாரணமாக பிரதமர் பிளேயர் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் இற்கு வழங்கிய உறுதி மொழியில் 'நான் உங்களுடன் எது நடந்தாலும் உறுதியுடன் இணைந்திருப்பேன்' என தனது கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருந்தார். அவ்வாறானால் போர் என்பது ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட ஒன்று என்பது தெளிவாகிறது. இக் கடிதம் குறித்த விரிவான விசாரணை இல்லை. இன்னொரு மிக முக்கியமான சம்பவம் இக் காலத்தில் இடம்பெற்றது. அதாவது 13 ஆண்டுகளுக்கு முன்னர் கதரீன் ஹன் (Katherine Gun) என்ற பெண் ஒருவர் பிரித்தானிய செய்மதி உளவுத்துறை நிறுவனத்தில் மொழியியலாளர் பதவியில் இருந்தார். அவருக்கு அமெரிக்க தேசிய பாதுகாப்பு முகவர் நிலையத்திலிருந்து மின் அஞ்சல் ஒன்று அனுப்பப்பட்டிருந்தது. அது ஐ நா பாதுகாப்புச் சபை பிரதிநிதிகளின் தொடர்புகள் இடைமறிக்கப்பட்டு பெறப்பட்டவை. அதனை அனுப்பி அவற்றில் ஏதாவது பயன்படுத்தி அப் பிரதிநிதிகளின் ஆதரவைப் பெற முடியுமா? என வினவுவதாக இருந்தது. அந்த மின் அஞ்சல் இரகசியத் தகவலை அவர் பகிரங்கப்படுத்தினார். அமெரிக்க அரசு அழுக்கான தந்திரங்களைப் பயன்படுத்தி போருக்கான நியாயங்களைக் கட்டமைக்கிறது என ஊடகங்கள் அம்பலப்படுத்தின. இத் தகவலை வெளியிட்ட அப் பெண்மணி அரச இரகசியங்களை வெளியிட்டார் எனக் குற்றம் சாட்டப்பட்டார். வழக்கின்போது அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் போர்க்காலத்தில் பிரதமர் ரொனி பிளேயருக்கு வழங்கப்பட்ட சகல சட்ட ஆலோசனைகளையும் தமக்கு வழங்குமாறு கோரினர். மேலும் பல தகவல்கள் வெளியாகலாம் என அஞ்சிய பிரித்தானிய அரசு இறுதியில் வழக்கை வாபஸ் வாங்கியது.

அப் பெண்மணியின் சாட்சியம் சில்கொட்டினால் பெறப்படவில்லை. அது மட்டுமல்ல அவரால் வெளியிடப்பட்ட மின் அஞ்சல் தகவல் குறித்தும் அறிக்கையில் எதுவும் இல்லை. சதாம் ஹுசைன் மக்களைக் கொல்லும் பல ஆயுதங்களை வைத்திருந்த போதும் அவற்றினை அவர் 10 வருடங்களுக்கு முன்னர் அழித்துவிட்டார். இது நன்கு தெரிந்திருந்தும் அவை இருப்பதாக தவறான தகவல்களை வழங்கினர். இவ் அறிக்கையினைத் தொடர்ந்து பிரதமர் பிளேயரை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கான வழக்கினைத் தாக்கல் செய்ய மனித உரிமை அமைப்புகள் தயாராகி வருகின்றன.

இங்கு எமது கவனத்திற்கு உரிய அம்சம் என்னவெனில் ஈராக் போரில் மரணித்தவர்களின் தொகை என்ன? என்பது குறித்து விரிவான தகவல்களை வழங்காது அமெரிக்கா மௌனம் சாதிப்பதுதான். இலங்கையில் இடம்பெற்ற போரின் இறுதிக் காலத்தில் மரணித்தவர்களின் தொகை குறித்து மௌனம் சாதிப்பது போன்ற அதே கதைதான்.

## பிரான்ஸ் நாட்டில் லொறியால் மோதி 80 இற்கு மேற்பட்டவர்கள் பலி

பிரான்ஸ் நாடு தற்போது தீவிரவாதிகளின் கொலைக்களமாக மாறி வருகிறது. சில மாதங்களுக்கு முன்னர் விளையாட்டு மைதானத்திலிருந்த மக்கள் மீது நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தினால் நூற்றுக் கணக்கானோர் கொலை செய்யப்பட்டனர். சமீபத்தில் பிரான்ஸ் நாட்டின் முக்கியத்துவம் மிக்க தேசிய தினத்தன்று மிக அதிகமான மக்கள் கடற்கரையில் திரண்டு வாண வேடிக்கைகளை ரசித்துக் கொண்டிருந்தபோது வேகமாக லொறி ஒன்றைச் செலுத்தி வந்த தீவிரவாதி ஒருவன் சிறுவர், முதியோர், பெண்கள் என்ற பேதமின்றி லொறியால் மோதிக் கொலை செய்தான்.

மத்திய கிழக்கில் காணப்படும் அமைதியற்ற நிலை குறிப்பாக சிரியா நாட்டின் உள்நாட்டுப் போர், அதனால் வெளியேறியுள்ள பல லட்சம் அகதிகள். அவர்களில் ஐரோப்பிய நாடுகளை நோக்கி கடல் கடந்து செல்லும் அகதிகள் போன்ற பிரச்சினைகள் பிரான்ஸ் நாட்டில் அமைதியற்ற சூழலை ஏற்படுத்தியுள்ளன. ஐரோப்பாவில் மிக அதிக அளவிலான முஸ்லீம் மக்களைக் கொண்டுள்ள நாடு என்பதாலும், சிரியாவின் உள்நாட்டுப் போரில் பிரான்ஸ் தீவிரமாக தலையிட்டு வருவதாலும் முஸ்லீம் மக்கள் மத்தியில் அமைதியற்ற நிலை காணப்படுகிறது. அது மட்டுமல்லாமல் பிரான்ஸ் அரசியலில் வலதுசாரி சக்திகள் அந்நிய மக்களுக்கு எதிரான பிரச்சாரங்களை இனவாத அடிப்டையில் எழுப்பி உள்நாட்டு அரசியலை கொந்தளிப்பு நிலைக்குத் தள்ளியுள்ளன.

பிரித்தானியாவில் நடைபெற்ற ஐரோப்பிய இணைப்பு பற்றிய வாக்கெடுப்பு எவ்வாறு இனவாதத்தின் உள்ளடக்கத்தைக் கொண்டிருந்ததுவோ, அதே நிலை தற்போது ஐரோப்பா எங்கணும் வியாபித்து வருகிறது. இனவாதமும், தேசியவாதமும் கைகோர்த்துச் செல்கிறது. ஹிட்லர், முசோலினி, இலங்கையில் கே.எம்.பி. ராஜரத்னா போன்றோர் மீளவும் உயிர் பெறுகின்றனர். எனவே இலங்கையில் கண்டியிலிருந்து கொழும்பு வரை செல்லும் ஊர்வலங்கள் எதுவும் தொடர்பற்ற சம்பவங்களாக இல்லை. இவற்றிற்கு ஓர் உள்ளடக்கம் உண்டு. அவை இறைமை என்ற முகமூடியுடன் நடத்தப்படும் மேலாதிக்க அல்லது குறுகிய தேசியவாதமே. மக்கள் விழிப்புணர்வு பெறாவிடில் அதற்கான விலையைச் செலுத்துபவர்கள் சாமான்ய மக்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமது பிரதிநிதிகளாலேயே கைவிடப்பட்ட கிழக்கு வாழ் தமிழ் மக்கள்

ஈழவிடுதலைப் போராட்ட காலத்தில் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களோடு பதுளை மற்றும் நுவரேலியா ஆகிய மாவட்டங்களையும் இணைத்து 10 மாவட்டங்களை உள்ளடக்கிய நிலப்பரப்பை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் ஈழப் புரட்சி அமைப்பும் ஈழம் என அழைத்தன. அதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகள் எனும் எல்ரிரிஈ யும். தமிழீழ விடுதலை இயக்கம் எனும் ரெலோ அமைப்பும். தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் எனும் புளொட் அமைப்பும் வடக்கு மற்றும் கிழக்கின் 8 மாவட்டங்களுடன் புத்தளம் மாவட்டத்தையும் சேர்த்து 9 மாவட்டங்களை உள்ளடக்கிய நிலப்பரப்பை தமிழீழம் என படம் வரைந்தன. எனினும் பெரும்பான்மையான தமிழர்களைப் பொறுத்த வரையில் தமிழர்களின் பாரம்பரியத் தாயகம் என்பது வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள மாவட்டங்களை மட்டுமே உள்ளடக்கியதாகும்.

## வடக்கு கிழக்கு இணைப்பே தமிழர்களின் விருப்பம்

1983க்குப் பின்னர் இந்தியாவைப் பின்தளமாகக் கொண்டு ஆயுதங்கள் தாங்கிய போராட்டத்தை தீவிரமாக முன்னெடுத்த ஈழ விடுதலை இயக்கங்கள் தமிழர்களுக்கான அரசியற் தீர்வு வடக்கு - கிழக்கை இணைத்தாகவே அமைய வேண்டுமென்பதில் பிடிவாதமாக இருந்தன. அந்த வேளையில் அரசியல் தீர்வுக்கான இடைத் தொடர்பாளராக இலங்கை அரசுக்கும் தமிழர் தரப்புக்கும் இடையில் இந்தியா செயற்பட்டது. உடனடியாக வடக்கு - கிழக்கை இணைத்த வகையாகவே அரசியல் அதிகாரப் பகிர்வு அலகு அமைய வேண்டும் என்ற ஈழ விடுதலை இயக்கங்களின் பிடிவாதத்தை இந்திய அரச பிரதிநிதிகள் முற்றாக புரிந்து ஏற்றார்களோ! இல்லையோ! விரைவானதொரு அரசியற் தீர்வு ஏற்படுவதற்கு வடக்கு - கிழக்கு இணைந்ததாக அதிகாரப் பகிர்வு அலகு இருக்க வேண்டுமென்பதை இலங்கை அரசிடம் வலியுறுத்தினர். கடைசியாக வடக்கு - கிழக்கு மாகாணங்களை உடனடியாக தற்காலிகமாக இணைப்பதற்கும் அடுத்து கிழக்கு மாகாணத்தில் ஒரு சர்வசன வாக்கெடுப்பை நடத்தி அது பற்றிய இறுதித் தீர்வை எட்டுவதெனவும் இலங்கை அரசு பிரேரித்ததை இந்திய அரசு ஏற்றது. அதுவே 1987ம் ஆண்டின் இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்திலும் இடம்பெற்றது.

அதன் அடிப்படையில் இலங்கையின் அரசியல் யாப்பில் 13வது திருத்தம் மேற்கொள்ளப்பட்டு மாகாண சபைகள் அமைப்பு இலங்கையில் உருவாக்கப் பட்டது. வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைத்து ஒரே நிர்வாக அலகாக வடக்கு-கிழக்கு மாகாணசபையும் யதார்த்தமாகியது. ஆனால், அவ்வாறாக இருந்து வந்த இணைப்பு தொடர்பாக 2006ம் ஆண்டு தீர்ப்பளித்த உச்சநீதி மன்றம், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இணைப்பைத் தொடருவ தற்கு சட்டப்படி இடமில்லை எனக் கூறியது. அப்போதைய மஹிந்த அரசாங் கம் அந்த இணைப்பில் நிலவிய சட்டரீதியான குறைபாடுகளை நீக்குவதற்குப் பதிலாக, உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பைப் பயன்படுத்தி வடக்கையும் கிழக்கை யும் நிரந்தரமாக பிரித்து வைத்திருப்பதிலேயே அக்கறை காட்டியது.

கடந்த காலங்களில் நடைபெற்ற அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங் களால் ஏற்பட்ட அரசியல் பொருளாதார விளைவுகளே வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட வேண்டும் என்பதற்கு தமிழர் தரப்பின் நியாயங்களாயின. கிழக்கு தனியாக இருக்கும் பட்சத்தில் அது தமிழர்களின் நலன்களைப் பலயீனப்படுத்தும் என்ற உணர்வே வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட வேண்டும் என வலியுறுத்துவதை அவசியமாக்கின.

## தனியான கிழக்கால் முஸ்லிம்கள் மகிழ்ச்சி தமிழர்களோ அச்சத்தில் - ஆத்திரத்தில்

அரசியல் யாப்பின் 13வது திருத்தப்படி இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண அமைப்பில் முஸ்லிம் மக்களின் அடிப்டை உரிமைகள், அவர்களின் நிலம் மற்றும் உடைமைகளுக்கான பாதுகாப்புக்கள் போன்றவை தொடர்பாக விசேட ஏற்பாடுகள் எதுவுமில்லை. வடக்கு கிழக்கு இணைந்திருக்கும் போது முஸ்லிம் களின் சனத்தொகை விகிதாசாரம் சுமார் 20 சதவீதமாகவே அமையும். இதனால் வடக்கு-கிழக்கு இணைந்த மாகாண சபையில் அவர்களின் பிரதிநிதித்துவம் குறைவாகவே இருக்கும். இந்த அடிப்படையான காரணங்களாலேயே முஸ்லிம் மக்களின் தலைவர்கள் கிழக்கு மாகாணம் தனியாக இருப்பதை விரும்புகின்றனர். கிழக்கு மாகாணம் தனியான நிர்வாக அலகாக ஆக்கப்பட்டதை பெரும்பான் மையான முஸ்லிம்கள் தமக்குக் கிடைத்த அரசியல் வரப்பிரசாதமாகவே எண்ணு கின்றனர். அதனால் இப்போதுள்ள வாய்ப்பை கைநழுவ விட்டுவிடக் கூடாது என்பதே அவர்கள் மத்தியில் இப்போது எடுபடும் அரசியலாக உள்ளது.

கிழக்கு மாகாண ஆட்சி அமைப்பு தனியானதொரு நிர்வாக அலகாக ஆக்கப் பட்டதைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத் தமிழர்களிடையே அவர்களின் அரசியல் பொருளாதார பாதுகாப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்திகள் தொடர்பான அச்ச உணர்வுகள் எழுந்தன. இன்றைக்கு அந்த அச்சங்கள் பல வடிவங்களில் புதிய யதார்த்தங்களாக வெளிப்பட்டுள்ளன. தமிழ்த் தேசவாத கட்சிகளும் தலை வர்களும் இணைந்த வடக்கு - கிழக்கு தமது தாயகம், அதுவே தமது தாகம் என்று அடிக்கடி சுலோகம் எழுப்புவோர் அந்த வார்த்தை ஜாலங்களுக்கு அப்பால் எந்தவொரு யதார்த்தமான அரசியல் வேலைத்திட்டத்திலும் ஈடுபடுவதில்லை.

## 1972 வரை தமிழர்கள் இணைப்பை கேட்கவில்லை 1990 வரை முஸ்லிம்கள் மாகாணம் கேட்கவில்லை

1949ம் ஆண்டு வரை எந்தக் கட்டத்திலும் தமிழர் தரப்பு அரசியற் பிரதிநிதிகள் சுயநிர்ணய உரிமையையோ அல்லது சமஷ்டியையோ கோரவில்லை, வடக்கும் கிழக்கும் தமிழர்களின் தாயகம் என்ற சுலோகத்தைக் கூட முன்னெடுக்கவில்லை 1957ம் ஆண்டு பண்டாரநாயக்கா - செல்வநாயகம் உடன்பாட்டில் ஒப்புக் கொள்ளப்பட்ட தீர்வில் வடக்கு பிராந்தியமும், கிழக்குப் பிராந்தியமும் தனித்தனி பிராந்திய நிர்வாக அலகுகளாக இருப்பதே ஏற்றுக் கொள்ளப்பட்டது.

வடக்கு -கிழக்கு மாகாணசபை திருகோணமலையை மையமாகக் கொண்டு செயற்பட்டதனால் அது கிழக்கு மாகாண மக்களுக்கு பெரும் நன்மைகளைச் செய்யக்கூடியதாக இருந்தது மட்டுமல்லாது. கிழக்கு மாகாண மக்களின் தேவைகளை நேரடியாகக் கவனித்துக் கொள்ளும் ஒன்றாக இருந்தது.

1983ம் ஆண்டைத் தொடர்ந்து இந்தியாவைப் பின்தளமாகக் கொண்டு தமிழ் இயக்கங்கள் செயற்பட்டுக் கொண்டிருந்த வேளை, இந்தியா ஓர் அரசியற் தீர்வுக்காக அப்போது முழு மூச்சாக டெல்லி - சென்னை - கொழும்பு என செயற்பட்டுக் கொண்டிருந்தபோது முன்னாள் அமைச்சர் காலம் சென்ற பதியுதீன் முகமட் அவர்களின் தலைமையில் முஸ்லிம் காங்கிரஸின் மறைந்த தலைவர் அஷ்ரப் உட்பட முஸ்லிம் தலைவர்கள் இந்தியத் தலைவர்களையும் தமிழ் இயக்கங்களின் தலைவர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்தினர். அந்த வேளையில் எந்த வடிவத்திலும் வடக்கு - கிழக்கில் முஸ்லிம் மாகாணம் உருவாக்கப்பட வேண்டும் என்பது பற்றிப் பேசவில்லை. வடக்கும் கிழக்கும் இணையக் கூடாது என்று எந்த வகையிலும் அவர்கள் கேட்கவில்லை. வடக்கும் கிழக்கும் இணைவது முஸ்லிம்களுக்குப் பாதகமானது என்று எந்த முஸ்லிம் தலைவரும் அப்போது பேசவில்லை. இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களுக்கு உரிய பிரதிநிதித்துவத்தை உத்தரவாதப்படுத்துவது பற்றி மட்டுமே அப்போது முஸ்லிம் தலைவர்கள் பேசினார்கள்.

## கிழக்கு மாகாணத்தின் அரசியல் யதார்த்தம்

கிழக்கு மாகாணத்தின் சனத் தொகையில் தமிழர்கள் தற்போது 40 சதவீத மானவர்களே. இங்கு முஸ்லிம்களின் சனத்தொனை 37 சதவீதமாகவும், சிங்களவர்களின் சனத்தொகை 23 சதவீதமாகவும் உள்ளது. 1981ம் ஆண்டு சனத்தொகை புள்ளிவிபரங்களோடு ஒப்பிடுகையில் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் சனத் தொகை விகிதாசாரம் 42 சதவீதத்திலிருந்து 40 சதவீதம் என்கிற அளவில் மட்டுமே குறைவடைந்துள்ளது. யுத்தத்தால் ஏற்பட்ட உயிரிழப்புகளும், மேலைத் தேச நாடுகளை நோக்கி தமிழர்கள் புலம் பெயர்ந்ததுவும் அதற்கான பிரதான காரணங்கள் எனலாம். வடக்கு மாகாணத்தோடு ஒப்பிடுகையில் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் சனத்தொகை விகிதாசார வீழ்ச்சி பெரிதளவில் இல்லையென்றே கூறலாம். திருகோணமலை மாவட்டத்தில் மட்டுமே தமிழர்களின் சனத்தொகை விகிதாசாரம் கணிசமாக வீழ்ச்சி அடைந்துள்ளது. இங்கு 1981ல் 42 சதவீதமாக இருந்த தமிழர்களின் சனத்தொகை இப்போது 32 சதவீதமாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களாக 18 பேர் உள்ளனர். இதில் 9 பேர் இஸ்லாமியர்களாகவும் 6 பேர் தமிழினத்தைச் சேர்ந்தவர்களாகவும் 4 பேர் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்களாகவும் உள்ள னர். குறிப்பிட்ட 9 இஸ்லாமிய உறுப்பினர்களில் 4 பேர் மத்திய ஆட்சியில் அமைச்சர்களாக உள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எதிர்க்கட்சி அரசியற் பாராம்பரியத்தைக் கொண்டவர்கள் என்பதால் அவர்கள் எந்த அமைச்சுப் பதவியையும் மத்திய ஆட்சியில் பெறவில்லை. தாம் பெறாதது மட்டுமல்ல வடக்கு கிழக்கைச் சேர்ந்த வேறெந்த தமிழரையும் மத்திய அரசின் அமைச்சராக வரவிடக் கூடாது என்பதிலும் அவர்கள் மிக உறுதியாகவும் உள்ளனர். ஆக வடக்கு - கிழக்கு தமிழர்களுக்கென ஓர் அமைச்சர் மத்திய ஆட்சியில் இல்லை.

கிழக்கு மாகாண சபையில் 37 உறுப்பினர்கள் உள்ளனர் இதில் 14 பேர் தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்களாவர். 13 பேர் இஸ்லாமியர்களாகவும், 10 பேர் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்களாகவும் உள்ளனர். கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக ஓர் இஸ்லாமியரே உள்ளார் எனினும் முதல மைச்சர் உட்பட 5 அமைச்சர்களைக் கொண்ட இந்த மாகாணத்தில் இரண்டு அமைச்சர்கள் தமிழினத்தைச் சேர்ந்தவர்கள். திரு. தண்டாயுதபாணி கல்வி அமைச்சராகவும், திரு. துரைராஜசிங்கம் விவசாய அமைச்சராகவும் உள்ளனர். ஆனால், அவர்களால் தமிழர்களுக்கு எந்தவிதமான பயனும் இல்லை என்பதே கிழக்கு மாகாணத் தமிழர்களின் பொதுவான அபிப்பிராயம்.

( இதன் தொடர்ச்சியை 5 ஆம் பக்கத்தில் பார்க்கவும் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தை சாதுரியமாகக் கடப்பதல்ல நல்லாட்சி

புலமைத்துவமும் சமூகப் பிரக்ஞையும் கொண்ட தோழர் ஒருவர் நவதாராளவாத உலகில் நாம் பிறான்ட் (Brand) அடிமைகளாக மாறியிருப்பதைப் பற்றி குறிப்பிட்டிருந்தார். தேவைக்கு மிதமிஞ்சிய நுகர்வு அவாவினுள் நாம் சிக்க வைக்கப்பட்டிருக்கிறோம் என்பதைச் சுட்டிக் காட்டிய அவர், காந்திய முறைமையின் சாராம்சம் மீட்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். அதிகார மையங்களின் கால்களை சுற்றி நின்று அதற்கு பவ்விய பக்குவமாக கீழ்ப்படிபவர்கள் எவ்வாறு லாபமடைகிறார்கள் என்பது பற்றிக் குறிப்பிடுகையில் சிவனையும் பார்வதியையும் சுற்றி வந்து மாம்பழத்தை வாங்கிக் கொண்ட பிள்ளையாரின் கதையை உதாரணமாகக் காட்டினார்.

மனிதர்களின் அமைதியான, சிக்கனமான, எளிமையான, பாசங்களோடு ஒட்டி உறவாடி, உறவுகளுக்குள்ளும் நட்புகளுக்குள்ளும் கணக்குப் பார்க்காமல் எடுத்தும் கொடுத்தும் வாழ்ந்த வாழ்க்கையை நவ தாராள வாத பொருளாதாரம் ஈவிரக்கமற்றதாக்கியிருக்கிறது. இங்கு எல்லாமே வியாபாரப் பண்டங்கள் - எல்லாமே விலை கொடுத்து வாங்கப்பட வேண்டிவையாக உள்ளது. இங்கு கைநிறைய பணமில்லாதவன் நடைப்பிணமாகத் திரிய வேண்டியுள்ளது.

இங்கு எழுதப்படுள்ள சட்டத்துக்கு பிடிபடாமல் பணத்துக்காக எதனையும் செய்யலாம் என்பது எழுதாது அங்கீகரிக்கப்பட்டுள்ள நியாயமாக ஆக்கப்பட்டிருக்கின்றது.

மக்களுக்கு இதுவரை கிடைத்து வந்த இலவசக் கல்வி, இலவச மருத்துவம் எல்லாம் பழங்கதையாகி விடுமோ எனும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.


இலங்கையில் உணவுப் பொருட்கள் உட்பட அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் ஐரோப்பிய மற்றும் வட அமெரிக்க விலைகளுக்கு கிட்டவாக, சிலவற்றில் அதற்கும் மேலாகச் சென்று விட்டன.

ஆனால் மக்களின் நாளாந்த மெய் வருமானத்தில் பெரியமாற்றங்கள் எதுவும் நிகழ்ந்து விடவில்லை.

பெருவாரியான மக்களுக்கு விழிம்பு நிலை வாழ்க்கையொன்றை தலைவிதியாக்கி விட்டு பெரும் பணக்காரர்களுக்கான உல்லாச புரியாக இலங்கையை மாற்றுவதற்கு திட்டமிட்ட வகையாகவோ பிரக்ஞை இல்லாமலோ முயற்சிகள் முனைப்பாக நடக்கின்றன.

வேலையில்லாமை என்ற பிரச்சினையை விட இங்கு நாள் முழுவதுவும் வேலை செய்தாலும் வறுமையைப் போக்க முடியாத நிலையிலேயே பெரும்பான்மையான மக்கள் உள்ளனர்.

உதாரணமாக வடக்கில் பல ஆயிரக்கணக்கான விவசாயிகளின் உற்பத்திகளை சந்தைப் படுத்துவதற்கான ஒரு பொருளாதார மையத்தைக் கட்டுவதற்கு 20 கோடி ரூபா. ஆனால் ஒரு தமிழ் பா.உ 6 கோடி ரூபா பெறுமதியான வாகனத்தை வரிச்சலுகையுடன் அடிமாட்டு விலையில் தனது பின்கதவு அரசியல் உறவைப் பயன்படுத்தி இறக்குமதி செய்துள்ளார்.



நவ தாராளவாத ஜனநாயகம் இப்படித் தான். ஈமெயில் வட்ஸ்அப், வைபர், என மிகக் குறைந்த செலவு தொலைத் தொடர்புகள் வந்திருந்தாலும், தொலைத் தொடர்பு நிறுவனங்கள் வெவ்வேறு நுட்பங்களைக் கையாண்டு பாவனையாளர்கள் அறியாவண்ணம், அறிந்தாலும் நிரூபிக்க முடியாவண்ணம் நாள் தோறும் கோடிக் கணக்கில் பகல் கொள்ளை அடிக்கின்றன.

புதிய தொழில் நுட்ப கண்டு பிடிப்புக்கள் காப்பிரேட்டுக்களுக்கு பணமழையாகவும் சாதாரண பெருவாரியான மக்களின் வயிற்றில் அடிப்பதுமாகவே அமைகின்றன. அலைத் தொடர்புக் கட்டணங்கள் கண்ணைப் பொத்தி அடிப்பவையாக அமைகின்றன. எப்படி சாதாரண மக்களிடம் பணம் பறிப்பதென்ற தந்திரத்தில் தேர்ந்தவையாக செயற்படுகின்றன. அரசு அதனைத் தெரிந்தும் தெரியாதது போல் அனுமதித்திருக்கிறது

2015 இல் அமைந்த நல்லாட்சி அரசாங்கம் பெருவாரியான மக்களின் பிரச்சனைகள் தொடர்பாக தீவிர கவனம் செலுத்தும் என்பதே பெருவாரியான மக்களின் எதிர்பார்க்கை. அதுவே தேர்தற்கால வாக்குறுதி.

பெருவாரியான சாமானிய மக்களின் சமூகப் பாதுகாப்பு என்ற விடயம் மிகப்பலவீனமான நிலையிலும், மிகக் குறைந்தளவு கரிசனைக்கு உரியனவாகவுமே காணப்படுகின்றன.

தமது தனிப்பட்ட வியாபார நலன்களுக்கு அப்பால் சமூக சாதகமான சிந்தனை கொண்டோரின் பங்களிப்பு அதிகார மட்டத்தில மிகக் குறைவாகவே காணப் படுகிறது.

மறைந்த இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தி ஒரு ரூபா செலவு செய்தால் 15 சதம் தான் மக்களுக்கு சென்றடைவதாக 1989ல் இந்திய பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார். அரசாங்க நிர்வாகத்தின் திறனின்மை, நிதி மோசடிகளையே அவர் சுட்டிக் காட்டினார். ஆனால் இந்தியா நவதாராளவாத பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிக்கத் தொடங்கிய சில ஆண்டுகளுக்குள்ளேயே பங்குச் சந்தையில் 15000 கோடி ரூபா மோசடி. அடுத்த சில ஆண்டுகளுக்குள் அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் சில ஆயிரம் கோடி ரூபா லஞ்சம் கொடுத்து மோசடி செய்த தொலைத் தொடர்பு நிறுவனங்கள் அரசுக்கு ஒரு லட்சத்து எழுபத்தி எட்டாயிரம் கோடி ரூபா இழப்பை ஏற்படுத்தின. அதாவது அரசினூடாக பொது மக்களுக்குச் சேர வேண்டிய அவ்வளவு பணத்தை தனியார் தொலைத் தொடர்பு நிறுவனங்கள் விழுங்கி ஏப்பமிட்டுவிட்டன. அந்த விவாதங்களின் சூடு ஆறுவதற்குள்ளேயே தனியார் நிலக்கரி வர்த்தக நிறுவனங்கள் அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் சில ஆயிரம் ரூபாய்களை லஞ்சமாக பிரித்துக் கொடுத்து விட்டு மலிவு விலைகளில் நிலக்கரிச் சுரங்கங்களை வாங்கிக் கொண்டன. இதனால் அரச வருமானம் 250000 கோடி இழப்புக்கு உள்ளானது. அதாவது பொது மக்களின் நலன்களுக்காக சேர வேண்டிய அவ்வளவு பணத்தையும் தனியார் நிலக்கரி நிறுவனங்கள் தமது சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டன.

நவதாராளவாத பொருளாதாரத்தில் நிலம், நிலக்கீழ் நீர், வான் வனம், நதி, மலை ஆகிய எல்லாமே வியாபாரப் பண்டங்கள் ஆக்கப்படுகின்றன. அவற்றை விலை கொடுத்தே மக்கள் வாங்க வேண்டும். அதற்காக மேலும் பல மடங்கு கடுமையாக உழைக்க வேண்டும்.

நல்ல வருமானம் தரும் தொழில்களைப் பெற வேண்டுமானால் நல்ல படிப்புத் தரம் வேண்டும். அந்த நல்ல படிப்புத் தரத்துக்காக பிள்ளைகள் தமது விளையாட்டு, பொழுது போக்கு, ஆட்டம் பாட்டு ஆகிய எல்லாவற்றையுமே தியாகம் செய்ய வேண்டியுள்ளது.

நல்ல வருமானம் வேண்டுமென்றால், அதற்கான வேலைகளுக்காக பல நூற்றுக்கணக்கான - ஆயிரக்

( தொடர்ச்சி 7 ஆம் பக்கம் பார்க்க )

## ஒளி மிகுந்த முஸ்லிம் பகுதிகள் இருளடைந்து கிடக்கும் தமிழர் வாழ்வு

அரச படைகளுக்கும் புலிகளுக்கும் இடையில் யுத்தம் நடந்த காலகட்டத்தில் கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் வாழும் பிரதேசங்கள் அனைத்தும் அழிவுகளையும் இறப்புகளையுமே சந்தித்துக் கொண்டிருந்தன. அவ்வாறான தாக்கங்கள் கிழக்கு மாகாணத்தில் இஸ்லாமியர்கள் வாழும் பிரதேசங்களில் மிகக் குறைவாகவே இருந்தன. அதனால் அப்பகுதிகளில் பொருளாதார முன்னேற்றத்தின் தொடர்ச்சிகள் தடைப்படவில்லை. இலங்கை அரசும் ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக தமிழர்களையும் இஸ்லாமியர்களையும் பிரித்தாளும் தந்திரத்தைக் கையாளும் முகமாக அமைச்சர் பதவிகளையும் அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடுகளையும் தாராளமாகவே வழங்கியது. அத்துடன் அரபு நாடுகளின் பொருளாதார உதவிகள் கிழக்கு மாகாணத்தில் இஸ்லாமியர்களின் பிரதேசங்களை முன்னேற்றுவதற்கு இலங்கை அரசாங்கம் எந்த தடையையும் விதிக்கவில்லை. 1994ம் ஆண்டு சந்திரிகா அம்மையாரின் ஆட்சி தொடங்கிய காலம்தொட்டு கிழக்கு மாகாணத்தின் புனர்வாழ்வு நிதி ஒதுக்கீட்டு அதிகாரங்கள் பெரும்பாலும் முஸ்லிம் அமைச்சர்களிடமே விடப்பட்டிருந்தது. இவ்வாறான பல்வேறு வாய்ப்புகள் முஸ்லிம் மக்களினதும் அவர்களது பிரதேசங்களினதும் வேகமான பொருளாதார முன்னேற்றங்களுக்கு காரணமாயின.

இப்பொழுது ஒருவர் கிழக்கு மாகாணத்தை ஊடறுத்து இரவு நேரத்தில் பயணம் செய்கையில் நன்கு ஒளி மிகுந்த பகுதியென்றால் அது இஸ்லாமியர்கள் வாழும் பகுதியாக இருக்கும், ஓரளவு ஒளி கொண்ட பகுதியாக இருந்தால் அது சிங்கள மக்கள் வாழும் பகுதியாக இருக்கும் இருளடைந்த பகுதிகளாக இருந்தால் அது தமிழர்கள் வாழும் பகுதிகளாக இருக்கும் எனக் கூறக் கூடிய நிலையே உள்ளது. இந்தக் கூற்று சற்று மிகைப்படுத்தப்பட்டதாகத் தோன்றினும் இது தமிழர்கள் வாழும் பகுதிகள் கிழக்கு மாகாணத்தில் எவ்வளவு பின்தங்கியிருக்கின்றன என்னும் உண்மையை வெளிப்படுத்துகிறது.

## ஐந்தாண்டுக்கு ஒருமுறை தேர்தல் - ஆனாலும் அரசியல் அநாதைகளாக கிழக்கின் தமிழர்

அம்பாறை மாவட்டத் தமிழர்களை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கைவிட்டு விட்டது என அங்குள்ள மக்களால் கூறப்படுகிறது. திருகோணமலை நகரப் பகுதியிலும் தமிழர்கள் சிறுபான்மையினரே என்னும் நிலை ஏற்படுவதற்கு காலம் வெகு தொலைவிலில்லை எனும் வகையாக நிலைமைகள் மாற்றமடைந்து வருகின்றன. மட்டக்களப்பு நகரின் வாவிக்கரையோரத்தை ஒட்டிய பகுதிகளில் ஓரளவு முன்னேற்றகரமான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிறதாயினும் பொதுவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்கள் வாழும் பகுதிகள் 1970 களில் இருந்ததை விட சோபை இழந்தவையாகவே உள்ளன.

தேர்தல்கள் ஒவ்வொன்றின் போதும் கிழக்கு மக்கள் தவறாமலே ஒற்றுமையாக தமது அரசியற் பிரதிநிதிகளைத் தெரிவு செய்கிறார்கள் தான். அதன் பிறுகு அடுத்த தேர்தல் வரை அந்தப் பிரதிநிதிகள் தமது சொந்த சுயநல அபிவிருத்திகளில் அக்கறையாக உள்ளனரே தவிர அங்கு வாழும் தமிழ் மக்களினதோ தமிழ் பிரதேசங்களினதோ அபிவிருத்திபற்றி எந்த அக்கறையும் கொள்வதில்லை. ஏனென்றால் தங்களது சொந்த சுயலாப அலுவல்களில் நேரம் போதாமல் சுறுசுறுப்பாக இருக்கும் அவர்கள் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்காக தாங்கள் போராடுகிறார்களாம். அதனால் தமிழர்களின் அடிப்படைத் தேவையான விடயங்களில் அக்கறை செலுத்த முடியாதுள்ளதாம்.

கேட்பவன் கேணையனாக இருந்தால்
சொல்பவன் வெண்ணை வைத்து கொக்கைப் பிடிப்பானாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தக் குற்றம் தொடர்பான சர்வதேசத்தின் தீவிரம் குறைய காரணம் என்ன?

*எஸ். அற்புதவதனி* *அளவெட்டி*

**கேள்வி : மஹிந்த ராஜபக்சாவின் ஆட்சிக்காலத்தில் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக தீவிரம் காட்டிய மேலைத்தேச நாடுகள். மைத்திரி – ரணில் ஆட்சி அமைந்ததைத் தொடர்ந்து அவ்விடயத்தில் மென்மைப் போக்கைக் கடைப்பிடிப்பது போல் தோன்றுகிறது. இது தமிழர்கள் மத்தியில் ஏமாற்றத்தையும் விரக்தி உணர்வுகளையும் அதிகரித்துள்ளமை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

பதில்: இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்க மறுத்தமை, ராஜீவ் காந்தியைக் கொலை செய்தமை, தனது நலன் களுக்கு ஒவ்வாத சர்வதேச ஏஜென்சிகளுடனான தொடர் புகள் கொண்டிருந்தமை ஆகியவற்றின் காரணமாகப் புலிகளை முறியடிக்க வேண்டும் என்ற இந்தியாவின் விருப் பும், அதே போல், இரட்டைக் கோபுரத் தாக்குதலின் பின னரான தமது நிலைப்பாட்டிற்கு மாறாக பயங்கரவாதத்தைத் தொடரும் புலிகளை முறியடிக்க வேண்டும் என்ற அமெரிக்காவின் விருப்பும், மகிந்த ராஜபக்ஸா மூலம் நிறைவேற்றப்பட்டது.

புலிகள் முற்றாக ஒழித்துக் கட்டப்பட்டு மீண்டும் தலை தூக்காது செய்ய வேண்டும் என்பது, புலிகளுக்கு எதிராக 2006ம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஸா அரசு மேற்கொண்ட தீர்க்கமான போர் நடவடிக்கைகளுக்குச் சில ஆண்டுகளுக்கு முன்னரேயே இந்தியா, அமெரிக்கா உட்பட்ட மேற்கு நாடுகளும் சேர்ந்து எட்டப்பட்ட முடிவு. அதனால் இலங்கை அரசபடைகளின் நடவடிக் கைகளுக்கு இந்த நாடுகளும் பல்வேறு ஒத்துழைப்புக்களை வழங்கின என்பது வெளிப்படையாகியுள்ள உண்மை.

புலிகளைப் போரில் முறியடித்த பின்னர், 1987ம் ஆண்டு இந்திய அரசினாலும், சிறீலங்கா அரசினாலும் கைச்சாத் திடப்பட்ட இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்ட இலங்கை அரசியல் யாப்பின் 13வது திருத்தத்தின் மூலமாக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரப் பகிர்வின் குறைபாடுகளை நீக்கி, அவற்றை முழுமையாக அமுல்படுத்தி, தமிழர்களின் இனப் பிரச்சினைக்கு மஹிந்த ராஜபக்ஸ தீர்வு காண்பார் என இந்தியா எதிர்பார்த்தது. அதன் மூலம் தமிழ் நாட்டிலுள்ள எதிர்ப்பலைகளைத் தணிக்கலாம் என இந்திய அரசு கணித்து வைத்திருந்தது. ஆனால், அந்த எதிர்பார்ப்புக்கு மாறாக, மஹிந்த ராஜபக்ஸா, அவரின் சகோதரர்களுடன் சேர்ந்து, புலிகளை வென்றமையைக் காட்டியபடி சிங்கள மக்களின் வாக்குகளைத் தம் பக்கம் தக்க வைத்துக் கொள்ளவும், அதன் மூலம் அரசியல் அதிகாரத்தை நிரந் தரமாகத் தக்க வைத்துக் கொள்ளவும் வகையாக தமது அரசியல் நகர்வுகளை மேற்கொண்டார். மஹிந்த அரசின் போக்குகள் தொடர்பாக இந்தியா அரசு அதிருப்தி கொண் டது. இதனால் இந்தியா தனது எதிர்பார்ப்பு களின் அடிப் படையில் நேரடியாகவும், மறைமுகமாகவும் அவ்வப்போது மஹிந்த அரசிடம் கோரிக்கைகளை முன்வைத்தது. ஆனால், மஹிந்த அரசு அவற்றை நாசூக்காக இழுத்தடிக் கும் முறைகளைக் கடைப்பிடித்தது.

அத்துடன், மஹிந்த ராஜபக்ஸா தனது ஏகபோக அதிகாரத் தின் மூலம் மேற்கொண்ட சீனா சார்புக் கொள்கைகளும், தமக்குச் சாதகமற்ற நடைமுறைகளும், இந்தியாவிற்கு மட்டுமல்ல, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கம் விரிவடைவதைக் கட்டுப்படுத்த வேண்டும் என விரும்பிய அமெரிக்கா மற்றும் அதன் சார்பு நாடுகளுக்கும் ஏற்புடையதாக இருக்கவில்லை. அதனால் அவை மஹிந்த ராஜபக்சாவின் ஆட்சியை மாற்ற வேண்டும் என்ற முடிவுடன் செயற்பட்டன – வெற்றியும் கண்டன.

இத்தகைய நிலைமை கடந்த நூறாண்டு காலமாக பல்வேறு கட்டங்களில் இருந்திருக்கிறது. சம்பந்தப்பட்ட ஒரு நாடு வர்த்தகம் மற்றும் இராணுவ ரீதியான பூகோள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தது என்றால், அந்த நாட்டின் ஆட்சி மாற்றங்களில் சர்வதேச ரீதியாக பொருளாதார மற்றும் இராணுவ வல்லமை கொண்ட நாடுகளின் செல்வாக்குகள் முக்கிய பாத்திரம் வகிப்பவையாக இருப்பதே இன்றைய சர்வதேச அரசியல் யதார்த்தம்.

இப்போதைய உலகில் அவ்வாறான ஆட்சி மாற்றத்துக்காக ஒரு நாட்டின் மீது இன்னொரு நாடு எவ்வளவுதான் வல்லமை கொண்டதாக இருப்பினும் படை எடுப்பது என்பது அவ்வளவு இலகுவானது அல்ல. எனவே, 'ஜனநாயகம்', 'சுதந்திர ஊடகம்', 'மனித உரிமை' ஆகியவற்றைப் பேணுவதாகத் கொள்ளும் வல்லரசு நாடுகள், அவற்றையே படையெடுப்புக்குப் பதிலான ஆயுதமாகப் பாவிப்பது இன்றைய காலகட்டத்தின் வழமையாக ஆகியுள்ளது. அரசுக்கெதிரான உள்நாட்டுச் சக்திகளைப் பலப் படுத் துவது, சூழ்நிலை சாதகமாக இருந்தால் அரசுக்கு எதிராக, அதன் பக்கபலமான பாதுகாப்புப் படையினருக்கு எதிராக, பாவிப்பதற்கு ஆயுதங்களை அள்ளி வழங்கி உள்நாட்டுக் கலவரங்களாக மாற்ற முனைதல் போன்றன அந்நிய ஈடுபாடுகளின் பாகங்களாக உள்ளன. பெரும்பாலும் 'மனித உரிமைகள்', 'ஜனநாயகம்' என்ற பெயர்களில் ஆட்சி மாற்றத்துக்கான நிலைமைகளை உருவாக்குவது இன்றைய கால நாகரீகமாக நவீன அரசியலில் உபாயங்களாக ஆகியுள்ளன. இதுதான் இலங்கையிலும் நடந்தது. ஐ.நா. அறிக்கைகள், ஜெனீவா மாநாடுகள், அமெரிக்க தீர்மானங் கள் எல்லாம் இலங்கையில் ஆட்சி மாற்றத்துக்கான இலக்கை ஒட்டியே மேற்கொள்ளப்பட்டன. விரும்பியபடி ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் ஐ.நா. மனித உரிமை அமைப்பின் பிரேரணை நீர்த்துப் போனமை எதிர்பார்க்கப் படக் கூடிய ஒன்றே, உலக அரசியல் சதுரங்கம் இப்படித் தான் விளையாடப்படுகிறது என்பதில் எந்தவித புதினமும் இல்லை. .

மேலும், புலிகளைத் தோற்கடித்து நாடு பிரிந்து போவதைத் தடுத்தது மஹிந்த ராஜபக்ஸாவே என்ற எண்ணம் கொண்ட சிங்கள மக்களில் கணிசமான பகுதியினரிடையே அவருக்குத் தொடரும் ஆதரவினால், மக்கள் மத்தியில்

## அபிமன்யு பதில்கள்

மைத்திரி - ரணில் அரசு பலவீனமானதாகச் சித்தரிக்கப் படுவதை இந்தியா உட்பட மேலைத் தேச நாடுகள் முடிந் தளவு தவிர்க்கவே முயலும். இதுதான் நடக்கிறது. அவற் றின் விளைவுதான், போர்க்குற்றங்கள் மற்றும் அப்பொழுது நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக இந்த நாடுகளின் தற்போதைய மென்மைத் தன்மைக்கும், அடக்கி வாசிக்கும் போக்குக்கும் காரணமெனலாம்.

ஆனால், வடக்கு-கிழக்கு பகுதிகளில் வாழும் தமிழர்களின் இன்னல்களைப் போக்கவும் அழிந்து போன தமிழர் பிரதே சங்களை மீளபிவிருத்தி செய்யவும் வக்கற்ற பெரும்பான் மையாகவுள்ள தமிழ் அரசியற் பிரதிநிதிகளும், வெளி நாடுகளில் வாழும் புலிவாத பிரமுகர்களும், தமது அரசியல் இயலாமையை மறைப்பதற்காக அமெரிக்காவும் ஜெனீ வாவும் தமக்குத் துணையாக இருப்பது போல் பாவனை செய்கின்றனர். புலிகளுக்கு முண்டு கொடுத்தும் வக்காலத்து வாங்கியும் அளப்பரிய அழிவுகளுக்குத் தாம் செலுத்திய பங்கை இன்று புதைத்து மறைக்க முயலுகின்றனர். அதற்கு அவர்களுக்கு "சர்வதேச விசாரணை" என்ற போலிக் கோசம் தேவைப்படுகிறது. மக்களுக்குத் தலைமை தாங்கி அவர்களின் உண்மையான கோரிக்கைகளை வலுப்படுத்த விருப்பமோ திராணியோ அற்றவர்களாக தாம் இருப்பதை வெளித் தெரியாதிருக்கச் செய்யும் நோக்குடன் தமிழ் மக்களை "சர்வதேச நாடுகள் தமிழர்களின் உரிமைகளைப் பெற்றுத் தரும்" என்ற மாயையில் வைத்திருக்க தொடர்ந்து முயற்சிக்கிறார்கள். இதனைத் தமிழ்ப் பொதுமக்கள் ஒவ வொருவரும் உணராமை தமிழ் மக்களைத் தொடரும் சாபக்கேடு!.

சர்வதேச நாடுகளின் நிகழ்ச்சி நிரல்களைச் சரியாக அடையாளம்கண்டு, அவற்றிக்கிடையேயான உறவுகளின் தன்மைகளை கணக்கில்கொண்டு, தமிழ் மக்களின் நலன் களுக்கான அரசியல் அணுகுமுறைகளையும் நடவடிக்கை களையும் மேற்கொள்ளுதல் வேண்டும். ஆனால், இங்கு தமிழ்த்தேச வாய்ச்சவடால் வீரர்கள் சும்மா இருந்தே, வீறாப்பாக சவால் விடும் பேச்சுகளால் மட்டுமே அரசியல் பிழைப்பை நடாத்திக் கொண்டிருக்கிறார்கள். இவர்களால் தமிழர்களுக்கு ஏமாற்றத்தையும், விரக்தியையும் வேதனை யையும் தவிர வேறெதுவும் மிஞ்சப் போவதில்லை.

*து.இளங்குமரன்* *உரும்பிராய்*

**கேள்வி: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிழையான செயற்பாடுகளாலும், வேண்டிய செயற்பாடுகள் இன்மையாலும், மக்கள் வெறுப்பும் விரக்தியும் கொண்டிருந்தாலும், தேர்தல் என்று வருகின்றபோது தமிழர்கள் பெரும்பான்மையாக அவர்களுக்கே வாக்களிக்கிறார்கள். இதற்கான காரணங்களை எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

பதில்: காரணங்கள் பல, இங்கே அவற்றுள் சில:

சிங்கள மக்களை ஒட்டுமொத்தமாக எதிரிகளாகக் காட்டி யும், சிங்களப் பேரினவாதிகள் வேறு, சாதாரண சிங்கள மக்கள் வேறு என்ற அணுகுமுறைகளை முன்னெடுப்பவர் களை இனத் துரோகிகளாகக் காட்டியும் மேற்கொள்ளப் படும் பிரச்சாரங்களை ஆராயாமல் அப்படியே தமிழ் மக்கள் நம்பும் பேதமை ஒரு காரணம்;

முஸ்லிம் மக்கள். மலையகத் தமிழர்கள், சிங்கள மக் களைப் பற்றிக் குறிப்பிடும் சந்தர்ப்பங்களில் தமக்கிடையே யும், ஏதும் காரணங்களால் ஆத்திரம் கொள்ளும் வேளை களிலும் இழிவாக, இழக்காரமாக கதைக்கும் போக்கு, வெளிக்காட்டும் மேட்டுக்குடி அகங்காரங்கள் மற்றொரு காரணம்;

தெளிவான கொள்கைகளையும் சரியான கருத்துக்களையும் யார் -எந்த இயக்கத்தினர்- எந்த கட்சிக்காரர்கள் உண்மை யான பற்றோடு கொண்டிருக்கிறார்கள் -அதற்காக உழைக்கிறார்கள் என்பது தெரியாமல்- அறிய முயலாமல், அக் கொள்கைச் சொற்றொடர்களை பாசாங்குத் தனமாக பயன் படுத்துபவர்களை கண்மூடித்தனமாக தமிழர்கள் நம்புகின்றமை மற்றொரு காரணம்;

"தமிழ்த் தேசியம்", "தமிழர் தேச சுயநிர்ணய உரிமை" என்று அவ்வப்போது, அறிக்கைகள் விடுகின்ற,

"நாம் ஆண்ட பரம்பரை", "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன்தோன்றி.ய மூத்த குடிகள்" என்று மேடைகளில் முழங்குகின்ற,

"சிங்களவர்களை நம்ப முடியாது - நம்பக் கூடாது" என ஒட்டுமொத்தமாக சிங்கள மக்களுக்கு எதிராக தமிழர்களை தூண்டுவதோடு,

"குமரி தொடக்கம் இமயம் வரை புலிக்கொடி நாட்டி ஆண்ட பரம்பரை சிங்களவனுக்கு அடிமையாவதா" என தமிழ் மக்களை உசுப்பேத்துகின்ற போலி தமிழ் அரசியற் கதாநாயகர்களின் உண்மை அடையாளம் தெரியாமல்,

அவர்களே "தமிழர்களின் மானத்தை காக்க வந்த ஆபத் பாந்தவர்கள்" என்று எண்ணுகின்ற உச்சகட்டமடைமைத் தனத்தோடு தமிழர்கள் உள்ளமையும் ஒரு காரணம்;

அரசியல், சமூக, பொருளாதாரத் தீர்வுகள் பற்றி அரசு தரப்போடு உறுதியான பேச்சு வார்த்தைகள், சந்திப்புகள் நடாத்தும்போது அவற்றைச் சாதிப்பதற்காக விட்டுக் கொடுக் கக்கூடிய விடயங்களில் பரஸ்பரம் விட்டுக் கொடுத்து விரைவாக இணக்கங்கள் ஏற்பட வழிவகுத்து தமிழர்களு க்கு கிடைக்க வேண்டிய – கிடைக்கக் கூடிய நல்லன வற்றை கிடைக்கச் செய்பவர்களே சமூகத்தின் உண்மை யான தலைவர்கள் ஆவர். ஆனால், இங்கோ அதற்கு மாறாக "சிங்களவர்கள் ஒன்றும் தர மாட்டார்கள்" என்று கூறிக்கொண்டே, அரசாங்கத்திடமிருந்து தமக்குத் தனிப் பட்ட ரீதியில் சலுகைகளையும், வசதிகளையும், வாய்ப்புகளையும் பெற்றுக் கொள்பவர்கள், சிங்கள அரசை எதிர்ப்பவர்கள் போல் போலி வேடமிட்டுத் திரியும் வேட தாரிகள் என்பதை தமிழர்கள் புரிந்து கொள்ளாமை மேலும் ஒரு காரணம்;

இன்றைய உள்ளக, சர்வதேச அரசியல் யதார்த்தத்தில், அத்துடன் முஸ்லிம்களும் மலையக மக்களும் தமிழர் களிலிருந்து அன்னியப் படுத்தப்பட்டுள்ள நிலைமையில், மேலும் தமிழர்களுக்குள்ளேயே பல்வேறு வகையான சமூகப் பிளவுகளும் பகைமைகளும் உள்ள நிலைமையில் தனித் தமிழீழம் பற்றிய கனவுகளுடன் நடைமுறையில் சாதிக்க முடியாத தீர்வுகளைப்பற்றிக் கூறுபவர்களை - அவை பொய்யானவை, போலியானவை என்று தெரிந் திருந்தும் - பகுத்தறிவுக்குப் பொருந்தாத வகையில் தமிழர் கள் அவர்களை நம்புவது தமிழர்களிடையே ஒரு விசேட குணம் இருப்பதைக் காட்டுகிறது. சர்வதேச நாடுகள் தமக் காகவே இயங்குகின்றன என்பது போல் தமிழர்கள் சினிமாத் தனமாக நம்புகிறார்கள் என்றே கருத வேண்டியுள்ளது. அதனாலேயே இங்கு அந்த சர்வதேச நாடுகளை வைத்து படம் காட்டுபவர்களையும் நம்புகிறார்கள். தமிழர்களிடையே இவ்வாறாக நிலவும் விசித்திர குணமும் முக்கிய காரணம்;

காலாகாலமாக, "ஒற்றுமை", "சர்வதேசத்துக்கான மக்கள் ஆணை" என்ற கோஷங்களை நம்பி எத்தனையோ பேரை எத்தனையோ தடவைகள் மீண்டும் மீண்டும் பிரதிநிதி களாக்கியும், எந்த உரிமைகளையும் பெறாதிருந்தும், தமிழர்களுக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை சிங்கள வர்களுக்கு சகுனம் பிழைத்தால் சரி என்பதே இங்குள்ள எண்ணப் போக்கில் ஆதிக்கம் செலுத்துகிறது. இதுவே தமிழர்களுக்கு கிடைத்த அரசியற் சந்தர்ப்பங்களையெல் லாம் கை நழுவ விட்டதற்கும், முள்ளிவாய்க்கால் வரை தவறான தலைமையால் அழைத்துச் செல்லப்பட்டு இலட்சக் கணக்கில் கொல்லப்பட்டதற்கும், இப்போது அரசியல்

( தொடர்ச்சி 7 ம் பக்கம் )

அபிமன்யு பதில்கள் கேள்வி பதில் பகுதிக்கு
உங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி :

அபிமன்யு பதில்கள்
பத்மநாபா மக்கள் முன்னணி அலுவலகம்
294 A, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோழர் கேதீஸ்

தமிழ் இனத்தின் அரசியல், சமூக, பொருளாதார விடுதலை வேண்டியும்
ஜனநாயக உரிமைகளை மீட்டெடுப்பதற்குமான போராட்டத்தில்

## தம் உயிரை அர்ப்பணித்த, தோழர்கள், ஆதரவாளர்களை

# நினைவு கூருவோம்

போராட்டத்தில் உயிர்நீத்த அனைவரதும் உழைப்புக்களும் தியாகங்களும் வீண்போகாது அவர்கள் விட்டுச் சென்ற பணியை, நம்பிக்கைகளை முன்னெடுத்துச் செல்வோம் என்ற உறுதியோடு அனைவருக்கும் அஞ்சலி செலுத்துவோம்



தோழர் நாகேஸ்

| பெயர் | தோழர் | இறப்பு | வசிப்பிடம் |
|---|---|---|---|
| தைரியராசா (தைரி) | நாகேஸ் | 1987.08.11 | நற்பிட்டிமுனை |
| என். பகீரதன் | பகீரதன் | 1984.08.24 | கல்முனை |
| ரி.தெய்வீகராஜா | மோகன் | 1984.08.24 | சேனைக்குடியிருப்பு |
| எஸ்.விவேகாணந்தராஜா | ரஞ்சன் | 1985.08.24 | தம்பிலுவில் - 02 |
| சிவநேசமூர்த்தி | சதா | 1985.08.24 | தம்பிலுவில் - 02 |
| கே.சவுந்தரராஜன் | ரவி | 1985.08.24 | தம்பிலுவில் - 02 |
| பி.நடேசமூர்த்தி | மோசெஸ் | 1987.08.20 | பளுகாமம் |
| எஸ்.நித்தியானந்தன் | சனனி | 1987.08.01 | தேத்ததீவு |
| | அலெக்ஸ் | 1988.08.25 | மகிலூர் |
| ஜேசுதாஸ் | ஜெயா மாஸ்ரர் | 1985.08.13 | முகத்துவாரம் |
| இராசநாயகம் சுகுமார் | சுகுமார் | 1987.08.17 | களுவாஞ்சிக்குடி |

| பெயர் | தோழர் | இறப்பு | வசிப்பிடம் |
|---|---|---|---|
| ஜே. ஞானப்பிரகாசம் | விஜி | 1990.08.20 | அம்பலாந்துறை |
| சீனித்தம்பி யோகராசா | ரஞ்சி | 2004.08.01 | மண்டூர் |
| | பாபு | 1988.08.04 | கண்ணாட்டி |
| கதிர்காமநாதன் | தயாளன் | 20.08.1986 | சுழிபுரம் |
| க.இராஜேந்திரன் | குமார் | 21.08.1986 | பருத்தித்துறை |
| த.பத்மநாதன் | சங்கர் | 21.08.1986 | கண்டி |
| | இமாம் | 10.08.1989 | அச்சுவேலி |
| | ருபன் | 07.08.1989 | நீர்வேலி |
| | பத்மன் | 06.08.1989 | ஆவரங்கால் |
| சி.ஏ.சி. குலரட்ணம் | இராஜன் | 16.08.1988 | அன்ரனிபுரம் |
| அ. கிறிஸ்ரியன் | பீற்றர் | 12.08.1989 | |
| லோ.கேதீஸ்வரன் | கேதீஸ் | 12.08.2006 | கொழும்பு |

**தமிழ் பேசும் மக்களின் விடிவிற்கான போராட்டத்தில் பங்கேற்று ஆகஸ்ட் மாதத்தில் உயிர் நீத்த தோழர்களில், எம்மால் திரட்ட முடிந்த தோழர்களின் பெயர் விபரங்களை மட்டுமே இங்கே பிரசுரித்துள்ளோம். இங்கு நினைவு கூரப்பட்டுள்ள தோழர்களின் விபரங்களை பூரணப்படுத்த பங்களிப்புச் செய்வதுடன் இங்கு பிரசுரிக்கத் தவறிய, தோழர்கள் பற்றிய தகவல்கள் அவர்களது புகைப்படங்கள் என்பவற்றை எமக்குக் கிடைக்கச் செய்யுமாறு அன்பர்கள், நண்பர்கள், குடும்பத்தவர்கள், தோழர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.**

## அரியலைவு.. ( 6 ம் பக்கத் தொடர்ச்சி )

ஏமாற்றுப் பேர்வழிகளிடம் தமிழர்களின் தலைவிதி ஒப்படைக்கப்பட்டிருப்பதற்கும் காரணமாகும்.

தமிழ் மக்களின் உண்மையான நலன்களுக்காக நேர்மையாகச் செயற்படாமல் தமிழினத்தின் வேதனைகளையும் சோதனைகளையும் மூலதனமாக்கி வியாபாரம் செய்வதோடு, போலித் தமிழ் அரசியல்வாதிகளின் பாதுகாவலர்களாக - பிரச்சாரகர்களாக விளங்கும் ஊடகங்கள் பக்கச் சார்பான, பொய்மையான செய்திகளை, ஆக்கங்களை வெளியிட்டு தமிழர்களை பிழையான புரிதலுக்குள்ளும் குழப்பமான சிந்தனைக்குள்ளும் வைத்திருக்கிறார்கள். தமிழ் மக்கள் யதார்த்தங்களைப் புரிந்துகொள்ளாமல் வைத்திருப்பதில் இந்த தமிழ் ஊடகங்கள் பெரும்பாத்திரம் வகிக்கின்றன. தமிழ்ப் போலிகள் மீண்டும் மீண்டும் மக்களால் தெரிவு செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதில் இந்த ஊடகங்கள் காத்திரமான பாத்திரத்தை வகிக்கின்றன. இதற்கு வெளிநாடுகளிலுள்ள புலிவாத கூட்டத்தினரும் சுயநலம் காரணமாக உடந்தையாக உள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இலங்கையில் பதவிக்கு வரும் அரசாங்கங்கள் தமிழ்மக்களின் நியாயமான உரிமைகள், கோரிக்கைகளை புறக்கணித்து வரும் அதேசமயம் பதவிக்கு வரும் அரசாங்கங்கள் செய்யும் இனரீதியான பாரபட்சங்கள், அநீதிகள், திட்டமிட்ட இன ஒடுக்குமுறைகளும் காரணங்களாகும்;

ஒன்றுபட்ட இலங்கைக்குள் சிறுபான்மை இனங்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என நியாயமாக கோரிவரும் சிங்கள, தமிழ் அரசியற் தலைமைகளின் கோரிக்கைகளை உதாசீனம் செய்துவரும் அரசாங்கங்களும், அரசுத் தலைவர்களும் ஒரு காரணம்;

அரசின் பாரபட்சங்கள் மற்றும் புறக்கணிப்புகளுக்கு எதிராகவும், சிங்களப் பேரினவாதத்தின் இன ஒடுக்குமுறை முயற்சிகளுக்கு எதிராகவும் காத்திரமாக செயற்பட வேண்டிய தலைமைகள், தங்கள் பதவி அரசியலைக் காப்பாற்றிக் கொள்வதில் மட்டுமே ஆர்வமாக உள்ளனர். தமிழர்களுக்கு இது குறித்த தெளிவான பார்வையும், சிந்தனையும் இல்லாதவரை, தமிழ் மக்களுடைய அரசியல் உரிமைகளை கிடைக்கின்ற சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி வென்றெடுக்கக்கூடிய சக்திகள் தொடர்பாக, தமிழ் மக்கள் ஞாபக மறதி கொண்டவர்களாக இருக்கும் வரை தமிழர்களை போலி அரசியலின் பிடியிலிருந்து விடுவிப்பது கடினமே.

கஞ்சி குடிப்பதற்கு இலார் - அதன்
காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்
துஞ்சி மடிகின்றாரே - இவர்
துயர்களைத் தீர்க்க வழியிலையே

**- பாரதியார் -**

## ஐந்தாண்டு ஆட்சிக்...

( 5ம் பக்கத் தொடர்ச்சி )

கணக்கான கிலோ மீட்டர்கள் தூரத்துக்கு அப்பால் இருக்கும் நகரங்களுக்கு இடம் பெயர்ந்து செல்ல வேண்டும். கற்பனைகளோடு பெரு நகரங்களுக்குச் செல்லும் பெருந்தொகையானோருக்கு அங்கு சேரி வாழ்க்கையே கிடைக்கிறது. இல்லையென்றால், மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்று வெயில் மழை, வெட்கம் மானம் என்று எதுவும் பாராது, நவீன வகையான அடிமைகளாக உழைக்க வேண்டும். இதனால் குடும்ப உறவுகள், சொந்த பந்த வாழ்க்கைகளையெல்லாம் தியாகம் செய்ய வேண்டியுள்ளது.

வாழ்க்கைக்காக பணம் என்பது போய் இந்த நவதாராள பொருளாதார கட்டமைப்பில் பணத்துக்காகவே வாழ்க்கை என்று ஆகிவிட்டது

இலங்கையின் தேசிய செல்வங்கள் - வருமானங்கள் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிறிய விகிதத்தினரிடையேதான் பகிரப்படுகிறது. இந்த நிலை மாறவேண்டும். நல்லாட்சி அரசாங்கம் என்பது ஐந்தாண்டுகளுக்கு சிரமமில்லாது ஆட்சிக் காலத்தைக் கடப்பதென்பதாகாது. சமூகங்களிடையேயும் சமூகங்கள் ஒவ்வொன்றினதும் அனைத்து மட்டங்களுக்கும் வளங்களைப் பகிர்வதில் நீதி கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

கீழ் மட்ட மற்றும் மத்தியதர வர்க்க மக்கள் இலவசமாகவும் இலகுவாகவும் தரமான கல்வியையும், மருத்துவத்தையும், போக்குவரத்து வசதிகளையும் பெறுவதற்கான ஏற்பாடுகள் திறனுடன் பராமரிக்கப்படுதல் வேண்டும். மக்கள் தமது சராசரி வருமானத்தைக் கொண்டு தரமான வாழ்க்கையை வாழ்வதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

அரச நிறுவனங்களும் சட்டங்களும் பொது மக்களின் மீது அதிகாரம் செலுத்துவதற்காகவல்ல, மாறாக, சாமானிய மனிதர்களின் உடல்களுக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பு வழங்குவதற்கும், அவர்களின் சுதந்திரங்களையும் சுயமரிதையையும் கண்ணியத்தையும் பேணுவதற்கும், அவர்களின் பொருளாதார வாழ்க்கையில் தொடர்ச்சியான முன்னேற்றத்தை உத்தரவாதம் செய்வதற்குமே உள்ளன என்பது உணரப்பட வேண்டும்.

தொழில் முதலாளிகளுக்கும் வர்த்தகர்களுக்கும் தேசத்தின் அனைத்தின் மீதுமான சுதந்திரங்களை தாராளமாக வழங்கி, அவர்களின் விருப்பங்களுக்கும் தேவைகளுக்கும் உட்பட்டவர்களே பொது மக்கள் எனும் நிலையே பேணப்படுமானால் அரசும் மக்களும் ஒருவரையொருவர் எதிரியாகவே பார்க்கும் நிலை ஏற்படும்.

## விஷ ஊசி விவகாரம்...

( 1 ம் பக்கத் தொடர்ச்சி )

இது தொடர்பாக வடக்கு மாகாண சபையில் நடந்த விவாதத்தின் போது சுகாதார அமைச்சர் இது தொடர்பான விபரங்களைத் திரட்டிக் கொண்டிருப்பதாகவும், வெளிநாட்டு வைத்திய நிபுணர்களின் உதவியை நாடவுள்ளதாகவும், அந்தப் போராளிகள் இராணுவ சிறையில் இருந்த காலத்து வைத்திய அறிக்கைகளை அரசிடம் கேட்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

விடுதலை செய்யப்பட்ட போராளிகளில் 107 பேர் இதுவரை இறந்திருப்பதாக பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. இவை இயல்பான இறப்புகளா? அல்லது கொலைகள் என்ற சந்தேகத்துக்கு உரியவைகளா? என்பதற்கான விடைகள் கண்டறியப்பட வேண்டும். அதேவேளை உடனடியாக இந்தக் குற்றச்சாட்டு தொடர்பான வைத்திய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

விபரங்கள் திரட்டுதல், அறிக்கைகள் கோருதல் என்பவை ஒருபுறம் இருக்க, உடனடியாக ஏன் வைத்திய பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவில்லை? எந்தவொரு வைத்திய நிபுணரிடமும் ஏன் இதுபற்றிய அபிப்பிராயம் பெறப்படவில்லை. அது வெளியிடப்படவில்லை. இங்கு வாழும் தமிழர்கள் மத்தியில் குறைந்த பட்சம் இது பற்றிய முதற்கட்ட வைத்திய பரிசோதனை செய்வதற்கான வைத்தியர்கள் இல்லையா அல்லது வசதிகள் இல்லையா?

உள்ளூரில் உரிய வைத்திய நிபுணர்கள் இல்லையென்று சொல்லப்படுமானால் அது தவறாகவே இருக்கும். அப்படித்தான் அதனை ஏற்றுக்கொண்டாலும், யாழ்ப்பாண பரம்பரையைச் சேர்ந்த வைத்தியர்கள் ஆயிரக் கணக்கில் மேலைத் தேச நாடு களில் இப்போது தொழில் புரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர் களிற் பலர் துறைசார் வைத்திய நிபுணர்களாகவும், சிலர் வைத்திய விஞ்ஞான மேதைகளாகவும் உள்ளனர். அவ்வாறான வைத்திய நிபுணர்களைக் கொண்டு உடனடி பரிசோதனைகளை மேற்கொள்வது அவசியமாகும். சர்வதேச வெள்ளைக்கார வைத்தியர்கள் வருவார்கள்! முன்னாள் போராளிகளுக்கு வாழ்வளிப்பார்கள் என்பது உதவத்த வெறும் புலுடாக் கதையே.

உடனடியாக உண்மையைக் கண்டறிந்து அதற்குரிய மாற்று வைத்திய ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கான எந்தவொரு உருப்படியான நடவடிக்கையையும் எடுக்காமல், வெறுமனே அரசியல் லாபத்துக்காகவும் பத்திரிகை வியாபாரத்துக்காகவும் பயன்படுத்தப்படும் ஒன்றாக இந்த குற்றச்சாட்டு அமையுமாயின் இது அந்தப் போராளிகளின் வாழ்க்கையையும், அந்தப் போராளிகளின் குடும்பங்கள் தமது எதிர்காலம் தொடர்பாக கொண்டிருக்கும் நம்பிக்கைகளையும் சிதைக்கும் பாரதூரமான தவறாகும். புனர்வாழ்வு பெற்றவர்கள் உளவியல் ரீதியாகவே பாதிப்புக்களுக்கு உள்ளாக நேரிடும், இன்னும் தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்களுக்கு நெருக்கடிகளை தோற்றுவிக்கும் தமிழினத்தின் மீதான பற்று என்ற திரைமறைவில் இங்கு பல அரசியல் சமூக மோசடிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் இதுவும் ஒன்றாக ஆகிவிடக் கூடாது என்பதில் தமிழர் சமூகம் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதவறிப் போகும் சம்பூர் மின் உற்பத்தி நிலையம்




**இரணைமடு நீர் விநியோகம். மாங்குளத்தில் வடக்கு மாகாணசபை செயலகம். வடக்கு மாகாணத்தில் பொருளாதார மையம். 65000 தயாரித்த வீடுகள் வழங்கல் என எந்தவொரு பிரதானமான விடயத்திலும் தமிழ் மக்களின் நன்மைகளைக் கருத்திற்கொண்டு உரிய கால நேரங்களைத் தவறவிட முன்னர் உரிய முடிவுகளை எடுக்கத் தெரியாத தமிழ் அரசியற் பிரதிநிதிகள் இந்த சம்பூர் மின் உற்பத்தி நிலையத்தையும் கோட்டை விடப்போவது ஆச்சரியத்துக்குரியதல்ல.**

## அழகான வளமான சம்பூரிலிருந்து அகதிகளாக விரட்டப்பட்ட தமிழர்கள்

திருகோணமலை மாவட்டத்திலுள்ள பிரதேச செயலக அதிகாரத்துக்கு உட்பட்ட தமிழ் பிரதேசத்தின் ஒரு பகுதியே சம்பூர் கிராமம். மூதூர் பிரதேச செயலக ஆட்சிக்கு உட்பட்ட பிருதேசங்களில் பெரும்பான்மையாக வாழ்பவர்கள் முஸ்லிம் மக்களே. எனினும் இப்பிரதேசத்தில் கணிசமான எண்ணிக்கையில் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். சம்பூர் முழுக்க முழுக்க தமிழர்கள் வாழும் கிராமமாகும் அப்பிரதேச எல்லைக்குள் அமைந்திருக்கும் கடற்கரைச் சேனை, கட்டை பறிச்சான், சேனையூர், சூரைக்குடா, சூனித்தீவு போன்றவையும் முழுக்க தமிழர்கள் வாழும் கிராமங்களாகும்.

2006ம் ஆண்டு மாவிலாறு யுத்தகள வெற்றியைத் தொடர்ந்து அரசபடைகளின் முன்னேற்றம் காரணமாக புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையிலான கடும் யுத்தம் மேற்குறிப்பிட்ட பகுதிகளிலிருந்து தமிழ் மக்களை அகதிகளாக வெளியேறப் பண்ணியது. குறிப்பாக சம்பூர் கிராத்திலிருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்களின் குடும்பங்கள் தற்காலிகமாக அமைக்கப்பட்ட தகரக் கொட்டகைகளில் அகதி முகாம் சீவியத்துக்கு தள்ளப்பட்டனர்.

## சம்பூர் மக்களின் பாரம்பரிய நில உரிமையை பறித்துக் கொண்டிருந்த மஹிந்த அரசாங்கம்

2009ம் ஆண்டு முள்ளிவாய்க்கால் யுத்த களத்தோடு புலிகளின் இராணுவ இருப்பு முடிவுக்கு வந்தது. இருப்பினும், மஹிந்த ராஜபக்சாவின் அரசாங்கம் சம்பூர் மக்களை அவர்களது இடங்களில் குடியேற விடாமல் அந்த ஊர் நிலங்களை தொடர்ந்தும் அரச படைகளின் கட்டுப்பாட்டிலேயே வைத்திருந்தது.

இந்தியாவுடன் கூட்டுச் சேர்ந்து அந்தப் பகுதியில் 500 சதுர ஏக்கரில் அனல் மின் நிலைய உற்பத்திக்கான திட்டத்துக்கு ஒப்பந்தமிட்டது. சுமார் 1000 ஏக்கர் நிலங்களை தென்னிலங்கை முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்காக பொருளாதார வலயம் ஒன்றிற்கு திட்டமிட்டு செயற்பட்டது. அதேபோல் 1000 ஏக்கர்களுக்கு மேற்பட்ட காணிகளை வெளிநாடுகளுக்கு குறிப்பாக சீனாவின் முதலீட்டுக்கான திறந்த பொருளாதார வலயத்துக்கு வழங்க திட்டமிட்டது. எஞ்சியவற்றை மிகப் பெரிய அளவில் தரைப்படை முகாம்கள் மற்றும் கடற்படை முகாம்கள் அமைப்பதற்காக திட்டமிட்டபடி வேலைத் திட்டங்களை நடத்திக் கொண்டிருந்தது.

## சம்பூர் மக்கள் மீளக் குடியேறியுள்ளார்கள் எனினும் - அனல் மின் நிலையம் ஒரு சிக்கல்

சம்பூர் மக்களை மஹிந்த அரசாங்கம் ஒன்றில் அகதி முகாம்களிலேயே தொடர்ந்தும் வைத்திருப்பது அல்லது அவர்களை சம்பூருக்கு வெளியே வேறு இடங்களில் குடியேற்றுவது என உறுதியாக செயற்பட்டது. சம்பூர் மக்களோ தமது பாரம்பரிய வாழ்விடம் தமக்கு மீளத்தரப்பட வேண்டுமென்பதில் உறுதியாக இருந்து போராடினர். 2015ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரி அவர்கள் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து சம்பூர் மக்களின் கோரிக்கைகளுக்கு விடிவு கிடைக்கத் தொடங்கியது. இந்திய அனல் மின் நிலையத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியையும் இராணுவ முகாம் மற்றும் கடற்படைகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள பகுதிகளையும் தவிர சம்பூர் கிராமத்தின் ஏனைய நிலங்களெல்லாம் அப்பகுதி மக்கள் மீளக் குறியேறவும் தொழில் புரியவும் அனுமதிக்கப்பட்டுவிட்டன.

அங்கு அமைந்துள்ள இராணுவ முகாம் மற்றும் கடற்படை முகாம்கள் பெரும்பாலும் அரச நிலங்களிலேயே உள்ளன. அனல் மின் நிலையத்துக்காக ஒதுக்கப்பட்ட காணிகளில் 52 குடும்பங்களின் வயற்காணிகளே உள்ளடங்கியுள்ளதாகவும், எனினும் அவர்கள் அனைவருக்கும் மாற்று அரச காணிகளிலோ அல்லது வேறு சொந்த இடங்களிலோ வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் அரசு தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. அவர்களின் வயற்காணிகளுக்கு உரிய நஷ்டஈடோ அல்லது அரச நிலங்களிலிருந்து மாற்று வயற்காணிகளோ வழங்குவதற்கு அரசு தயாராக இருப்பதாகவும் அதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எனினும், இங்கு உள்ளடங்கியுள்ள வயற்காணிக்காரர்கள் தமது சொந்த நிலங்கள் தமக்கு மீள ஒப்படைக்கப்பட வேண்டும் என வலியுறுத்துவதாகவே கூறப்படுகிறது.

## அனல் மின் நிலைய விடயத்தில் சறுக்கி விளையாடும் சம்பந்தர்

சம்பூர் கிராமத்தின் கடற்கரையை ஒட்டிய ஒரு பகுதி நிலப் பிரதேசத்தில் அனல் மின் நிலையம் அமைக்கப்படும் விடயத்தில் இப்போது அப்பகுதி மக்களின் வாழ்வாதார மற்றும் குடியிருப்பு உரிமை விவகாரங்களை விட தற்போது அப்பகுதியில் அனல் மின் நிலையம் அமைக்கப்படுவதால் ஏற்படக் கூடிய சுற்றுப் புறச் சூழல் முறைப்பாடுகளே பிரதான முரண்பாடாக எழுந்துள்ளன.

அனல்மின் நிலையம் அங்கு அமைந்தால் அப்பகுதியின் காற்றும், நீர் நிலைகளும் மாசடையும்; நிலவளங்களும், வனங்களும் பாதிக்கப்படும்; கடலில் நிலக்கரி சாம்பல் கலக்கும் பொழுது கடலில் மீன்வளம் பாதிக்கப்படும் மேலும் இங்கு சில பகுதிகளில் வேடுவர்கள் வசிக்கின்றனர் அவர்களின் இயற்கையான வாழ்க்கை பாதிக்கப்படும் என பல காரணங்களைச் சுட்டிக் காட்டி சுற்றுப் புறச் சூழல் ஆர்வம் கொண்ட பசுமை பாதுகாப்பு அமைப்புகள் வலிமையாக எதிர்த்தன.

அந்த அமைப்புக்கள் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற தமிழ் பிரதிநிதியும் எதிர்க் கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான திரு சம்பந்தனிடம் முறையிட்டபோது அவர் அது தொடர்பாகக் கூறிய கருத்துக்கள் அந்த பசுமை அமைப்புக்களின் சூழல் மாசடைதல் பற்றிய கருத்துக்களை அங்கீகரித்தாகவே அமைந்தது. ஆயினும் அதற்கான மாற்று ஏற்பாடுகள் தொடர்பாக இந்தியாவுடன் பேசுவதற்கு அவர் தயாராக இல்லை என்பதையே அவரது அபிப்பிராயங்கள் காட்டின.

## ஹெரவலபிட்டியாவிற்கு நகரும் சம்பூர் அனல்மின் நிலையம்

**ஜனாதிபதி மைத்திரி அவர்கள் சில மாதங்களுக்கு முன்னர் புதுடெல்லி சென்றிருக்கையில் இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்தி நிலக்கரி மூலமான அனல்மின் நிலையத்துக்குப் பதிலாக இயற்கை வாயுவைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு இந்திய அரசாங்கம் ஒப்புக் கொண்டதாகவும் செய்திகள் தெரிவித்தன.**

**ஆனால், கடந்த சில வாரங்களாக செய்திகள் வேறுவிதமாக ஆகியுள்ளன. அதாவது ஜனாதிபதி அவர்கள் கெரவலப்பிட்டியாவில் இயற்கை வாயு மூலமான மின் உற்பத்தி நிலையத்தை ஆரம்பிப்பதற்கு இந்தியாவைக் கேட்டுக் கொண்டுள்ளதாகவும், அதற்கான பேச்சுவார்த்தையில் இரண்டு அரசாங்கங்களும் ஈடுபட்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.**

**சம்பூரின் மின் உற்பத்தி நிலையத்தோடு மேலதிகமாக கெரவலப்பிட்டியவிலும் அவ்வாறான மின் உற்பத்தி நிலையம் அமையப் போகிறதா? அல்லது சம்பூர் மின் உற்பத்தி நிலையத் திட்டம் கைவிடப்பட்டு அதற்குப் பதிலாக கெரவலப்பிட்டியவில் மின் உற்பத்தி நிலையம் அமைய உள்ளதா? என்பது இது வரை தெளிவாகத் தெரியவில்லை.**

( இதன் தொடர்ச்சியை 9 ஆம் பக்கத்தில் பார்க்கவும் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனல் மின் நிலையம் வேண்டுமா? வேண்டாமா? த. தே. கூட்டமைப்பு - மதில் மேல் பூனை

500 மெ□ாவட் மின் உற்பத்திக்கான திட்டமாக 2006ம் ஆண்டு ஒப்புக் கொள்ளப்பட்ட சம்பூர் அனல் மின்நிலைய திட்டத்துக்கான கட்டு வேலைகள் 2008ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2017ம் ஆண்டு மின் உற்பத்தியை ஆரம்பிப்பது என்றே இருந்தது. 2009ம் ஆண்டு புலிகளுக்கு எதிரான யுத்தம் நடைபெற்ற வரை அதனை ஆரம்பிப்பதில் பல நடைமுறைச் சிக்கல்கள் இருந்தன. யுத்தம் முடிவுற்றதன் பின்னர் தமிழர்களிடையே இருந்த அதற்கான எதிர்ப்புக் குரல் காணியுரிமை தொடர்பாக எழுந்த அதேவேளை இலங்கை அரசும் ஒப்பந்தத்தை இறுதி முடிவு செய்வதில் இழுபறி நிலையைக் கடைப்பிடித்தது. சம்பூரில் இருந்து யத்தத்தின் காரணமாக வெளியேற்றப்பட்ட மக்கள் மீண்டும் குடியேறுவதற்கு அனுமதிக்கப்பட்டதைத் தொடாந்து அனல் மின் நிலையத்துக்கு எதிராக சுற்றுப் புறச் சூழல் தொடர்பான இயக்கங்கள் நடாத்தப்பட்டன.

இந்த காலகட்டங்களில் திரு சம்பந்தனோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேறு தலைவர்களோ இந்திய அரசாங்கத்துடன் சம்பூர் அனல் மின் நிலையம் தொடர்பான பரஸ்பர நன்மைகள் குறித்து எதுவித பேச்சுவார்த்தைகளிலும் பொறுப்பான முறைகளில் ஈடுபடத் தயாராக இருக்கவில்லை. ஒரு பக்கம் இந்தியா கோவிக்குமோ? அல்லது மறுபக்கம் தமிழர்கள் மத்தியில் கெட்ட பெயர் வந்து விடுமோ? எனும் நிலையில் மதில் மேல் பூனைகள் போல் இருந்து கொண்டார்கள். இவற்றால் இந்தியா சம்பூர் விடயத்தில் சற்று தளர்ச்சியான நிலையை முடிவு செய்ய ஆரம்பித்தது தெரிந்தது.

## தமிழர் - சிங்களவர் நோக்கங்கள் வேறு அனல் மின் நிலையம் பற்றிய விளைவு ஒன்றே

சம்பூர் அனல் மின் நிலையம் தமிழர்களைப் பொறுத்தவரையில் வெறுமனே அவர்களின் காணிகளைப் பறிக்கின்ற விடயம்தானா? அல்லது நீண்டகால ரீதியில் தமிழர்களின் அரசியல் பொருளாதார நலன்களோடு தொடர்புபட்ட விடயமா? என்ற கேள்விகளுக்கான விடைகள் தமிழர்கள் மத்தியில் அறிவு பூர்வமாக ஆராயப்படவில்லை. அதேபோல, அனல்மின் நிலையங்களால் பொதுவாக சுற்றுப்புறச் சூழல் மாசடைவது பற்றிய கருத்துக்களிலிருந்து அனல் மின் உற்பத்தி நிலையம் பற்றிய எதிர்ப்புக்கள் கிளம்பினவா? அல்லது சம்பூரின் அனல் மின் உற்பத்தி நிலைய ஏற்பாட்டில் எந்தளவு தூரம் சுற்றுப் புறச் சூழல் பாதகாப்பு விடயங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளன - எடுக்கப் படவுள்ளன என்ற கேள்விகளுக்கான விடைகள் விஞ்ஞானரீதியான ஆய்வின் அடிப்படையில் கண்டறியப்பட்டே அதற்கெதிரான இயக்கங்கள் எழுந்தனவா? என்பது பற்றியும் தீர்க்கமான விளக்கங்கள் இல்லை.

எவ்வாறாயினும் தமிழர்களின் பாரம்பரிய காணியுரிமைப் பிரச்சினைகள் மற்றும் சுற்றுப்புறச் சூழல் தொடர்பான இரண்டு காரணிகளும் சம்பூர் அனல் மின்நிலையத்தின் தாமதத்துக்கான வெளிப்படையான காரணிகளே. இதைவிட, மஹிந்த அரசாங்கம் யுத்தகாலத்தில் இந்தியாவுக்கு சம்பூர் ஆசையைக் காட்டினாலும் யுத்தத்தில் வெற்றி கொண்டதன் பின்னர் இந்தியாவை அதிலிருந்து கழட்டி விடுவதிலேயே ஆர்வம் காட்டியது. சம்பூரில் இந்தியாவைக் காலூன்ற விடாமற் பார்த்துக் கொள்வதில் சிங்களத் தரப்பும் தமிழ்த் தரப்பும் ஒரே விடயத்தைச் சாதிப்பதற்கு ஒன்றுக்கொன்று துணையாக இருப்பது இந்தியாவுக்கு சங்கட நிலையை ஏற்படுத்தியுள்ளது தெரிகிறது.

## சம்பூர் அனல் மின் நிலையம் அம்போ ஆகுமா!?

தமிழர்களின் பெயரில் தனது நலன்களுக்காகவே இந்தியா இலங்கையில் தலையிடுகிறது என்பது பெரும்பான்மையான தமிழர்களினால் நீண்டகாலமாக தொடர்ந்து வெளிப்படுத்தப்படும் ஒரு குற்றச் சாட்டு. எனவே, இப்போது இலங்கையிலான தனது நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு சம்பூர் அனல் மின் நிலையம் அவ்வளவு அவசியமானதல்ல எனவும் கெரவலப்பிட்டிய அதற்கு மாற்றான பலனைத் தரும் எனவும் இந்தியா முடிவெடுத்துவிட்டதா என்பதுவும் இன்னமும் தெளிவாக இல்லை.

அதேபோல மறுபக்கம், தமிழர்களின் அபிலாஷைகள் தொழிற்சாலைகளை விட அவர்களது காணிகளையே அடிப்படையாகக் கொண்டது என்பதைக் கண்டு கொண்ட மைத்திரி - ரணில் ஆட்சியும் இன நல்லிணக்கத்துக்காக முயற்சிகள் மேற்கொள்ளப்படும் இன்றைய காலகட்டத்தில், பெரும்பான்மையான தமிழர்களின் விருப்பப்படி அவர்களின் வயற் காணிகளை திரும்பக் கொடுத்துவிட்டால் எழக் கூடிய அரசியற் தலையிடிகளைத் தவிர்த்துக் கொள்ளலாம் என முடிவு செய்துவிட்டார்கள் போல் தெரிகிறது. சம்பூரில் உற்பத்தி செய்துதான் மின்சாரத்தை இலங்கைக்கு வழங்க வேண்டுமென்றில்லை. லக்ஸபானா போல, நுரைச்சோலை போல கெரவலப்பிட்டியவில் இருந்தும் மின்சாரத்தை உற்பத்தி செய்து இலங்கையின் தேசிய மின்சார விநியோக இணைப்புக்கு வழங்கலாம் என அவர்கள் முடிவு செய்திருந்தால் சம்பூர் மின் உற்பத்தி விடயம் நடத்தி முடிக்கப்பட்டவற்றிற்கான குறைந்த செலவுகளோடு மூடப்படுவது நிச்சயமாகும்.

நிலக்கரி மூலமான அனல்மின் நிலையம் இருக்கும் வரை சம்பூர் மீது அக்கறை காட்டிய இந்தியாவும் இலங்கை அரசும் இயற்கை வாயு முறையிலான மின் உற்பத்தி என்றவுடன் எதற்காக சம்பூரைக் கைவிட்டு கெரவலப்பிடடியவை தெரிவு செய்ய வேண்டும் என தமிழர் தரப்பில் இருந்து கேள்வி எழக்கூடும். இந்தியாவிடமும் இலங்கை அரசிடமும் அதற்கான பதிலை பெரும்பான்மையான தமிழர்களின் உத்தியோகபூர்வமான பிரதிநிதிகளே கேட்க வேண்டும் - கேட்க முடியும்.

## வடக்கு அமைச்சர்களின் ஊழல் மோசடிகள் ... ( 1 ம் பக்கத் தொடர்ச்சி )

வடக்கு மாகாண சபை மூன்றாண்டுகளாக மக்களின் எதிர்பார்ப்புகளில் எந்தவொரு சிறிய அளவிலும் எந்த நன்மையும் செய்யவில்லை. வீராவேசமான தீர்மானங்களையும், வெளிநாட்டுக்காரர்களை வேஷம் போட்டு நின்று சந்திப்பதையும் தவிர வேறெதனையும் செய்யவில்லை. மாகாண சபையின் அதிகாரங்கள் தொடர்பாகக் கூட எந்தவொரு அர்த்தமுள்ள தீர்மானத்தையும் இதுவரை நிறைவேற்றவில்லை. கழுதை செய்ய வேண்டிய வேலையை நாய் பார்த்தது போல பாராளுமன்றத்தில் தமிழ்ப் பிரதிநிதிகள் பேச வேண்டியவற்றையே இந்த தமிழரசு மாகாண சபையினரும் மறு ஒலிபரப்பு செய்தார்கள். யாழ்ப்பாண வியாபார பத்திரிகைகள் கட்டுரைகளாக பிரசுரிப்பதற்கு அறிக்கைகள் தயாரித்து வெளியிட்டதைத் தவிர மக்களுக்குப் பயன்படும் எதனையும் செய்யவில்லை. இதனை பல்வேறு தடவைகள் தமிழரசுத் தலைவர்களும், பல மாகாண சபை உறுப்பினர்களும் வெளிப்படையாகவே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்த தமிழரசு மாகாண சபையினர் தங்களுக்கு சிறிலங்கா அரசு தந்த எல்லா சலுகைகளையும் சொகுசுகளையும் ஒன்று விடாமல் பெற்றுக் கொள்வதில் மகா வீரர்களாக செயற்பட்டு வந்திருக்கிறார்கள்.

இந்த தமிழரசு மாகாணசபை அமைச்சர்கள் தமிழ் மக்களுக்கு எந்தவித நன்மையையும் செய்யாதது மட்டுமல்ல, மக்களுக்காக மத்திய அரசால் ஒதுக்கப்பட்டு அனுப்பப்படும் நிதி வளங்களை கையாடல் மோசடி செய்திருக்கிறார்கள், வடக்கிலுள்ள சில தனியார் நிறுவனங்களின் மக்கள் விரோத நடவடிக்கைகளை மறைப்பதற்காக லஞ்சங்கள் பெற்று ஊழல் பண்ணியிருக்கிறார்கள். இவை வடக்கு மக்கள் மத்தியில் பரவலாக பேசப்பட்டு வந்துள்ள பரகசிய விடயங்களே. இந்த லஞ்ச ஊழல் மற்றும் நிதி மோசடிகளில் ஈடுபட்டதாக வடக்கு அமைச்சர்களில் மிக முக்கியமானவரும் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் மிகுந்த நம்பிக்கைக்குப் பாத்திரமானவருமான ஐங்கரநேசன் மீது சென்ற 6 மாதங்களுக்கு முன்னர் மாகாண சபையிலேயே குற்றங்கள் சாட்டப்பட்டன. அதற்கான பகிரங்க விசாரணையும் கோரப்பட்டது. ஆனால் இதே வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் அதற்கான விசாரணைக்கு மறுத்து விட்டமை ஊரறிந்த பழங் கதை.

இப்போது, வடக்கு மாகாண அமைச்சர்கள் மீது பொதுமக்களினால் குற்றச்சாட்டுக்கள் ஆதாரங்களோடு முன்வைக்கப்பட்டு வருவதாகவும், அதை விசாரிக்க இரண்டு இளைப்பாறிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் ஓர் இளைப்பாறிய அரசாங்க அதிபர் என மூன்று பேரைக் கொண்ட விசாரணைக் கமிஷன் அமைக்கப்படவுள்ளதாக வடக்கு முதலமைச்சர் கூறியுள்ளார். அந்த வகையில் முதலமைச்சர் இப்போது தமது அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கு அதற்கு வேண்டிய முதற் கட்ட ஆதாரங்கள் இருப்பதனை ஏற்றுக் கொண்டுள்ளார்.

இந்த தமிழரசு வடக்கு மாகாண சபையில் மட்டுமல்ல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சியின் கீழிருந்த பிரதேச சபைகள் மற்றும் நகர சபைகளும் தமிழ் மக்களுக்கு எந்தவித நன்மையும் செயயாததோடு, லஞ்ச ஊழல்களும் மக்களுக்கான நிதிகளை மோசடி செய்பவையாகவும் அமைந்திருந்தமையானது பொதுமக்கள் மத்தியில் நிலவிய கருத்துகள் மட்டுமல்லாது, அதே அபிப்பிராயத்தை பல தமிழரசுக்காரர்கள் பகிரங்கமாக வெளிப்படுத்தியமையும் இங்கு நினைவுபடுத்தத் தக்கது.

முன்னர் லஞ்ச ஊழல் மற்றும் நிதி மோசடி குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கு மறுத்த வடக்கு முதலமைச்சர் இப்போது அதற்கு ஒப்புக் கொண்டிருப்பது அரசியல் உள் நோக்கம் கொண்டவை என்பதே பல அரசியல் நோக்கர்களின் கணிப்பு. தமிழரசுக் கட்சிக்குள்ளும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர்களுக்குள்ளும் தற்போது பகைமைப் பிளவுகள் கூர்மையடைந்து வருவது இரகசியமல்ல.

இவ்வேளையில் ஊழல் மற்றும் மோசடிக் குற்றச்சாட்டுக்களை முதலமைச்சர் விசாரிக்க முற்படுவது வெறுமனே தனது ஆட்சிக்கு தானே நற்சான்று வழங்குவதற்கான கண்துடைப்பு முயற்சியா? அல்லது மாவை சேனாதிராஜா மற்றும் சுமந்திரனுக்கு சார்பான வடக்கு மாகாண சபை உறுப்பினர்களை அடக்குவதற்கான மறைமுக மிரட்டலா? அல்லது தமிழரசுக் காரர்களுக்குள்ளேயே நடக்கவிருக்கும் பழிக்குப்பழி நிகழ்ச்சிகளுக்கான தொடக்கமா? என்பது மிகவிரைவில் தெரியவரும்.

எவ்வாறாயினும், முதலமைச்சர் ஒப்புக் கொண்டுள்ளபடி காலம் தாழ்த்தியாயினும் உண்மைகள் உண்மையாகவே பகிரங்கத்துக்கு வந்தால் அது நல்லதே. பெரும் ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கு உள்ளான கடந்த ஆட்சியாளர்களை மக்கள் பதவியிருந்து தூக்கி எறிந்த பின்னரும் கூட அவர்களின் ஊழல்கள் மோசடிகளை நிரூபணங்களோடு சட்டத்தின் முன்நிறுத்த முடியாத அளவுக்கு இப்போதைய மைத்திரி - ரணில் ஆட்சியில் இருக்கும் போது, முதலமைச்சருக்கு விசுவாசமான அமைச்சர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை அவர்களை பதவியில் வைத்துக் கொண்டே மேற்கொள்ளப்படும் விசாரணை எவ்வளவு தூரம் நேர்மையானதாக இருக்கும் என்பது கேள்வியே. குற்றங்கள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்படும் வரை குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளியல்ல எனும் கோட்பாடு குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் ஒரு சாதாரண மனிதனுக்கே பொருந்தும். நிர்வாக சட்ட முறைமைக்கு அவசியமான இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கு இது முரணானது. குற்றச்சாட்டுகள் தொடர்பான முதற்கட்ட ஆதாரங்கள் கொண்ட ஒரு விசாரணையில் குற்றஞ்சாட்டப்பட்டவரை அதிகாரத்தில் வைத்துக் கொண்டே அந்த விசாரணையை நடத்துவது நீதி முறைமைக்கே ஊறு விளைவிப்பதாகும்.

தனது அமைச்சர்கள் மீதான நீதி விசாரணைக்கு முதலமைச்சர் தானே நீதிபதியாக முடியாது. குற்றச்சாட்டுகளுக்கான முதற்கட்ட ஆதாரங்கள் இருப்பதை முதலமைச்சரே ஒப்புக் கொண்டுள்ள நிலையில் விசாரணைக் குழுவை மத்திய அரசே நியமிக்க வேண்டும் விசாரணை முடியும் வரை குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள அமைச்சர்கள் தற்காலிகமாகவேனும் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும். தமிழரசு அமைச்சர்கள் என்பதற்காக நீதியை தமது வசதிக்குத் தக்கபடி வளைப்பது முன்னாள் நீதியரசருக்கு அழகல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாபகம் வருதே ஞாபகம் வருதே

# கேடுகெட்ட முதலாளித்துவத்தின் கடந்த காலம்

அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகள் தமது ஏகாதிபத்திய பொருளாதார கட்டமைப்பை உலக மயமாக்குவதற்குத் தடையாக இருந்த சோவியத் யூனியனை இல்லாது செய்வதற்கு இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்த நாளிலிருந்து தொடர்ந்து அனைத்து வழிமுறைகள் மூலமும் முயன்றன.

## ஏகாதிபத்திய திட்டத்திற்கு முதல் இலக்கான போலந்து

போலந்து நாட்டையே தமது அந்த இலக்குக்கான முதற் களமாக கண்டறிந்தன. போலந்து கிழக்கு ஐரோப்பாவின் சோசலிச முகாமின் ஒரு பகுதியாக இருந்தது. அங்கு லெக் வலேசா என்பவரின் தலைமையிலான தொழிற் சங்கம் அரசுக்கெதிரான தொழிலாளர் போராட்டங்களை வலிமையாக நடாத்தி தொழிற்சங்கங்களுக்கான சுதந்திரங்களையும் தொழிலாளர்களுக்கான பல்வேறு அடிப்படை ஜனநாயக உரிமைகளையும் நிலைநாட்டினார். இதைக் கண்ட மேற்குலக முதலாளித்துவ நாடுகள் லெக் வலேசாவையே சோசலிச முகாம்களை இல்லாமற் செய்வதற்கான தமது இலக்குக்குரிய காயாக நகர்த்தின.

அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. வலேசாவின் தொழிற்சங்க அரசியல் ஆர்பாட்டங்களை ஏகாதிபத்திய ஊடகங்கள் உலகம் முழுவதுவும் முன்னுரிமை கொடுத்து பிரச்சாரப்படுத்தின. "சிங்கம் போல நடந்து வாறான் செல்லப்பேராண்டி" என்பது போல் மேற்குலக பிரபல ஊடகங்கள் ஆரவாரத்துடன் வரவேற்றன. ஜனநாயகத்தின் மாபெரும் மீட்சியாளனாக சித்தரித்தன. இந்த நாடுகள் எதிர்பார்த்தது போலவே கம்யூனிஸ்ட்டுகளின் கையிலிருந்த போலந்து ஆட்சி கவிழ்ந்தது, லேக் வலேசா போலந்தின் ஜனாதிபதி ஆனார். மேற்குலக நாடுகள் திட்டமிட்டது போலவே சோவியத் யூனியன் உட்பட கிழக்கைரோப்பாவின் அனைத்து நாடுகளிலும் சோசலிச கட்டமைப்பு ஒவ்வொன்றாக அடுத்தடுத்து தகர்ந்தது.

## சோசலிஸ நாடுகளின் தொடர் வீழ்ச்சி

ருமேனியாவிலா் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. சோவியத் யூனியன் 15 நாடுகளாகியது. செக்கோஸ்லாவாக்கியா செக் மற்றும் சிலோவாக்கியா என இரண்டு நாடுகளாக அமைதியாகவே பிரிந்தன. சோவியத் யூனியனின் செல்வாக்கு மண்டலத்துக்கு வெளியே தனித்துவமாக இருந்த யூகோசிலாவியாவானது சேர்பியா, குரோசியா, கொசோவா, மஸிடோனியா பொஸ்னியா – ஹெர்ஸகொவினா மற்றும் ஸ்லோவேனியா என ஆறு நாடுகளாக சிதறியது.

சோசலிச அமைப்பைக் கொண்டிருந்த கிழக்கு ஜேர்மனியை முதலாளித்துவ மேற்கு ஜேர்மனியுடன் இணைப்பதுவும் மேற்குலக முதலாளித்துவ நாடுகளின் பாரிய திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்து வந்தது. சோசலிச அமைப்புக்களின் ஆட்சி முறைகளையும், அரசியற் பொருளாதார கட்டமைப்புகளையும், தேசிய கட்டுப்பாடுகளையும் நெறிமுறைகளையும் மனித உரிமைகளை மீறுகின்ற அமைப்புகளென்றும், சோசலிச நாடுகள் அனைத்தும் மனிதர்களை அடைத்து வைத்துள்ள சிறைக்கூடங்கள் என்றுமே மேற்குலக முதலாளித்துவ நாடுகள் தொடர்ந்து பிரச்சாரம் செய்தன. "வெள்ளை அடிப்பதன் மூலம் மனித உரிமை மீறல்களை மூடிமறைத்து விட முடியாது" என்று பெர்லின் பகுதிக்கு விஜயம் செய்த அன்றைய அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மிகாட்டர் கிண்டல் பண்ணினார். மேற்குலகின் நீண்டகால கனவான பெர்லின் சுவரும் வீழத்தப்பட்டது. சோசலிச கிழக்கு ஜேர்மனி இல்லாது போனது.

## பயங்கரவாதத்தை உற்பத்தி செய்தவர்கள்

1980களில் ஆப்கானிஸ்தானில் சோவியத் யூனியனுக்கெதிராக மத அடிப்படைவாதிகளை உற்பத்தி செய்ததுவும், தற்போது அல்ஹைதாவாகவும், தாலிபான்களாகவும், ஐஎஸ்ஐ ஆகவும் நீட்சி பெற்றிருக்கும் கொடூர வன்முறை மதவாத அமைப்புகளை உற்பத்தி செய்ததுவும் இந்த மேற்குலக முதலாளித்துவ நாடுகளே. இன்றைக்கு அதே முதலாளித்துவ நாடுகளால் கட்டுப்படுத்த முடியாத பூதங்களாக அவை உருவெடுத்திருக்கின்றன.

இஸ்ரேலைப் பயன்படுத்தி மத்திய கிழக்கு முழுவதையும் யுத்தகளமாக்கிய இந்த மேற்குலகு முதலாளித்துவ நாடுகள் 1990ன் பின்னர் ஈராக் குவைத்தைக் கைப்பற்றியதை சாட்டாகக் கொண்டு மத்திய கிழக்கின் வளங்கள் முழுவதையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வரும் இலக்குடன் யுத்தங்களைத் தீவிரப்படுத்தினார்கள்.

யூபிரடீஸ் - டைகிறீஸ் நதிக்கரை நாகரிகத்தை அழித்தார்கள்.

லிபியாவை அடங்கி ஒடுங்கப் பண்ணினார்கள்.

எகிப்தை அமைதியற்றதாக்கினார்கள்.

## சோசலிஸ நாடுகளுக்கு சேறடிக்க சலுகைகள் வழங்கி சூழ்ச்சி செய்தவர்கள்

கிழக்கு ஐரோப்பிய சோசலிச முகாம்களிலிருந்து மக்கள் மனித உரிமை மீறல்களின் காரணமாக மேற்கு ஐரோப்பிய நாடுகளை நோக்கி உயிர் தப்பி ஓடிவருகிறார்கள் என்றும், அதற்காக மனிதாபிமான அடிப்படைகளில் அவர்களை ஏற்று அரசியல் அகதி அந்தஸ்த்து வழங்கி சுதந்திர வாழ்வு வழங்குவதற்காக தமது சட்டங்களை இலகுபடுத்துவதாகவும் ஏற்பாடுகளை மேற்கொண்டு சோசலிச நாடுகளுக்கு எதிராக தமது தாராள மனிதாபிமானத்தை வெளிக்காட்டி வந்தார்கள். இது சோசலிச நாடுகளைச் சேறடிக்கும் நோக்கம் கொண்டவை என்பது அப்போதே தெரிந்ததொரு விடயம். சோசலிச நாடுகளிலிருந்து அரசியற் காரணங்களுக்காக வெளியேறியவர்கள் ஒரு புறமிருக்க, பொருளாதார வாய்ப்புகளை நோக்கமாகக் கொண்டு அவ்வாறு வெளியேறி முதலாளித்துவ அரசுகளின் சலுகைகளை அனுபவிக்க ஓடிவந்த பல லட்சக்கணக்கானவர்களுக்கும் இந்த சுலபமான அகதி அந்தஸ்த்து சலுகைகள் வசதியாக அமைந்தன.

சுவர்களை தகர்த்து மேற்கு ஐரோப்பா எனவோ கிழக்கு ஐரோப்பா எனவோ இல்லாமல் ஒரே ஐரோப்பா என ஆன போது ஒப்பீட்டுரீதியில் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாக இருந்த போலந்தியர்கள், பல்கேரியர்கள், ருமேனியர்கள் உட்பட கிழக்கு ஐரோப்பியர்கள் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்குள் மட்டுமல்ல பிரித்தானியாவிற்குள்ளும் பிரவேசித்தார்கள்.

மேற்கத்தைய முதலாளித்துவ நாடுகள் மத்திய கிழக்கை சின்னாபின்னப் படுத்தியதனால் அந் நாடுகளின் மக்களினுடைய பாதுகாப்பு, இருப்பு, வாழ்வு எல்லாம் கேள்விக்குறியாகிய போது – பேரழிவுகளுக்கு உள்ளான போது துருக்கி கிரேக்க மற்றும் இத்தாலி கடற்கரைகள் அகதி மக்களால் நிரம்பி வழிவது தவிர்க்க முடியாததாகியது.

கடலில் மடிந்தவர்கள் போக குளிர்காடுகளினூடாக ஐரோப்பாவை நோக்கி அப்பாவி மக்கள் படை படையாக பாதுகாப்பும் வாழ்வும் தேடி ஓடினார்கள்.

## உலக மக்களை அகதிகளாக்கியவர்கள் அகதிகளுக்கு கதவை மூடுகிறார்கள்

தாங்கள் திட்டமிட்டபடி சோசலிச முகாம்களை நாசமாக்கிவிட்டார்கள். பாலைவனங்களான போதிலும் நிலத்தின் கீழே அள்ள அள்ளக் குறையாத வளங்களைக் கொண்ட மத்திய கிழக்கை சாவுகளும் அழிவுகளும் நிறைந்த துன்பக் காடாக்கினார்கள். தங்கள் ஏகாதிபத்திய திட்டங்களெல்லாம் இப்போது நிறைவேற்றியாகிவிட்டது எனும் போது அகதிகள் தங்கள் நாடுகளுக்குள் வரக் கூடாது என கதவுகளை மூடுகிறார்கள். அதிலும் பிரிட்டன் தான் ஐரோப்பாவின் பகுதியல்ல தனித்துவமான நாடு என தன்னைச் சுற்றி இரட்டை வேலி அடைக்கிறது, அதற்கு நியாயங்களும் கற்பிக்கிறது.

பிரிட்டன் மூன்று நூற்றாண்டுகள் சூரியன் மறையாத சாம்ராச்சியத்தை வைத்திருந்ததாக பெருமைப்படும் நாடு, அந்தளவுக்கு உலகில் பெரும்பாலான நாடுகளையும் வளங்களையும் தமது ஆதிக்கத்தில் வைத்திருந்தது.

இந்திய மக்களை குறிப்பாக தமிழக மக்களை இலங்கை, மலேசியா, மொறிசியஸ், பிஜி என கொத்தடிமைகளாக கொண்டு சேர்த்தவர்களும் பிரித்தானியர்களே.

ஆபிரிக்காவில் இருந்து மக்களை மிருகங்களைப் போல் பிடித்துச் சென்று அடிமை வியாபாரம் செய்ததுடன் நூறாண்டுகளுக்கும் மேலாக தமது சொந்த நாட்டிலேயே எந்த மனித உரிமையும் அற்றவர்களாக - அடிமைகளாக வைத்து வேலை வாங்கியவர்கள் இப்போது மற்ற நாட்டுக்காரர்கள் தங்கள் நாட்டுக்குள் வரக் கூடாது என பிரித்தானிய அதிகாரவர்க்கம் பிரித்தானிய தீபகற்ப தேசியவாதத்தைக் கக்குகிறது.

800 ஆண்டுகள் இங்கிலாந்துக்காரர்களின் ஆட்சியின் கீழ் இருந்த போதும் ஸ்கொட்லாந்து மக்கள் தாம் தனித்துவமானவர்கள் என்பதை நிரூபித்திருக்கிறார்கள். பிரித்தானியா ஐரோப்பிய யூனியனில் இருந்து விலகுவதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

இங்கிலாந்துக்காரர்கள் கொப்பிலிருந்து மரத்தை வெட்டுகிறார்கள் .

அமெரிக்க குடியரசுக் கட்சியின் வேட்பாளர் றொனால்ட் ரம்ஸ் மெக்சிக்கோவின் எல்லையில் வேலி அடைப்பதைப் பற்றிப் பேசுகிறார். முஸ்லீம்கள் அமெரிக்காவினுள் பிரவேசிப்பதைத் தடுப்பேன் என்கிறார்.

## நவ தாராள பொருளாதாரத்தின் குரூரம்

இனவெறி சக்திகள் ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவில் மாத்திரமல்ல உலகம் முழுவதும் இந்த நவ தாராளவாத உலகில் தலைதூக்கி நிற்கின்றன. தேசிய இனவாதங்கள் தேர்தல் ஜனநாயகத்தில் வாக்கு வேட்டைகளுக்காக தலையெடுத்து ஆடுவது போலவே, ஐஎஸ்ஐ போன்ற அடிப்படைவாதக் குழுக்களும் இந்த நவதாராளவாத முறைமையின் குரூரமான பிரசவங்களே.

உலகின் பெரும்பான்மையான மக்கள் வறுமையாலும் பேரழிவுகளாலும் அல்லலுற்று நிற்கின்றனர். இவற்றுக்கு நடுவே அமெரிக்கா மற்றும் பிரிட்டன் போன்றவை தமக்கென தனியான சுவாசக்குழாய்கள் வைத்துக் கொள்ளப் பார்க்கின்றன.

குறுங்குழு இனவாத தேசியவாதங்கள் பாசிசத்திற்கே இட்டுச் செல்லும்.

## யுத்தங்கள் தற்செயலானவை அல்ல

இரண்டாம் உலக யுத்தகால பாசிசத்தின் நிழல் மீண்டும் இந்தப் பூமியல் எந்த அளவிலும் எந்த வடிவிலும் படியக் கூடாது.

இயற்கைப்பேரழிவுகளும், யுத்தங்களும் தன்னிச்சையாக தற்செயலாக நிகழ்பவை அல்ல. உலக இயற்கை வளங்கள் ஒரு சில நிறுவனங்களினால் வகைதொகையின்றி சூறையாடப்படுவதாலேயே இயற்கைப் பேரழிவுகள் நிகழ்கின்றன. அனைத்து மக்களினதும் கடும் உழைப்பால் உருவாக்கப்படுகின்ற செல்வ வளங்களை ஒரு சில முதலாளிகள் பங்கு போட்டுக் கொள்ள முனைவதாலேயே யுத்தங்கள் நிகழ்கின்றன.

இதிலிருந்து மனித குலம் மீண்டெழ வேண்டியிருக்கிறது. உலகின் எந்தப் பாகத்திலும் எந்த மகனும் குடியேறலாம் - வாழலாம் எனும் நிலை ஏற்பட வேண்டும். உலகின் அனைத்து வளங்களும் உலக சமநீதியின் அடிப்படையில் பகிரப்பட வேண்டும். தங்களது மூலதனங்களுக்கு நாடுகளைத் திறந்து விட வேண்டும் என்று கேட்கும் பொருளாதார வல்லரசு நாடுகள் பின்தங்கிய நாட்டு மக்களின் உழைப்பு தங்களது நாட்டுக்குள் வருவதைத் தடை செய்வது உலக மய மான முதலாளித்துவத்தின் அசிங்கமான உள்ளடக் கத்தின் ஒரு வெளிப்பாடே.

தி. சிறிதரன் 294, [illegible] வீதி, யாழ்ப்பாணம், அவர்களால் [illegible] 78, [illegible] வீதி, யாழ்ப்பாணம் புதிய [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org